REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK


2022 ஜூலை 26 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 174 | Tuesday 26, July, 2022 | 12 பக்கங்கள் | 40/-




## அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் நாளை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

### நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் நாளை 27 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

21ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்பட்டு 19ஆவது திருத்தம் ஒன்றிணைக்கப்பட்டு 22ஆவது அரசியலமைப்பு திருத்தமாக தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், பாராளுமன்றத்தில் 22ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான முதலாம் வாசிப்பு (உச்ச நீதிமன்றத்தின் மூலம் சவாலுக்கு உட்படாதிருந்தால்) ஒரு வாரத்துக்குப் பின் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும்

04

## இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த அழைப்பு

### ரணிலுக்கு புடின் கடிதம் எழுதினார்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் (Vladimir Putin), இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில், ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துமாறு கோரியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று இலங்கைக்கான

04

## இந்தியாவின் 15 ஆவது ஜனாதிபதியானார் திரௌபதி

### நேற்று நீதியரசர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம்



இந்தியாவின் 15 ஆவது ஜனாதிபதியாக திரௌபதி முர்மு நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்திய நாடாளுமன்றத்தில் இந்திய உயர் நீதிமன்றின் பிரதம நீதியரசர் என். வி. ரமணா முன்னிலையில் நேற்று முற்பகல் 10.15க்கு இந்த பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

04

### ஜனாதிபதி ரணிலின் வீட்டுக்கு தீ வைப்பு சம்பவம்;

# CID விசாரணைகளில் சிக்கிய இருபது நபர்கள்

### பிரதேசவாசிகளின் உதவியுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

சமூக வலைத்தளங்கள், CCTV வீடியோ மற்றும் புகைப்படங்கள் ஊடாக அடையாளம் காணப்பட்ட 20 பேரையும் கைது செய்ய நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பு கொள்ளுப்பிட்டி 05ஆம் லேனிலுள்ள பிரத்தியேக வீட்டுக்கு தீ வைத்தமை தொடர்பில் 20 பேர் முகங்களுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத் தீ வைப்பு சம்பவம் இடம்பெற்றபோது அப்பிரதேசத்தில் இருந்துள்ள தரப்பினர் சமூக வலைத்தளங்களுக்கும் அனுப்பியிருந்த வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்படங்களூடக நிறுவனங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட

04



பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள தினேஷ் குணவர்தன நேற்று (25) பிரதமர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக தனது கடமையை பொறுப்பேற்றார். பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, பிரதமரின் மேலதிக செயலாளர் ஹர்ஷ விஜேவர்த்தன மற்றும் அரச அதிகாரிகள், முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான சிசிர ஜயகொடி, அருந்திக பெர்னாண்டோ, கலாநிதி சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான யாதாமினி குணவர்த்தன, சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர். ஜகத் குமார, மஞ்சுள திஸாநாயக்க மற்றும் மக்கள் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்து கொண்டனர்.



## பிரித்தானிய பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்களை இணைப்பது நிறுத்தம்

03

### பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பு;

## ஸ்டாலின், வசந்த உட்பட அறுவருக்கு வெளிநாடு செல்ல தடை விதிப்பு

### கொழும்பு மஜிஸ்திரேட் நீதவான் உத்தரவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொலிஸ் தலைமையகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்து பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனரென குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்த முதலிகே, ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட ஆறு பேருக்கு கொழும்பு

04

### நாட்டில் கொவிட் பரவல் தீவிரம்;

## சுகாதார வழிமுறைகளை பின்பற்ற வலியுறுத்தல்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் மக்கள் முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுமாறும் சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் தற்போது பரவிவரும் புதிய வகை கொரோனா வைரஸானது ஓமிக்ரோன் வைரஸின் திரிபு எனக் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அந்தவகையில் இந்த வைரஸ் மிக வேகமாக பரவக்கூடிய என்றும் சுகாதார அமைச்சர் தொற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் நிபுணர் டாக்டர் அன்வர்

04

## குரங்கு அம்மை இலங்கையிலும் பரவ வாய்ப்புகள் உள்ளது

### எச்சரிக்கை அவசியம் என்கிறார் Dr.சந்திம ஜீவந்தர



சர்வதேச போக்குவரத்து தொடர்புகள் எவையும் இன்றி குரங்கு அம்மை நோய் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இனங்காணப்பட்டுள்ளது. எனவேதான் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் சர்வதேச பொது சுகாதார அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குரங்கு அம்மை ஒரு வைரஸ் நோய் என்பதால் எந்நேரத்திலும் இலங்கையில் பரவக் கூடிய அபாயம் இருப்பதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் ஒவ்வாமை பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

04

## கப்ரால் வெளிநாடு செல்ல தொடர்ந்தும் தடை விதிப்பு

### அக்டோபர் 26வரை நீடிப்பு


**லோரன்ஸ் செல்வநாயகம்**



பிணை முறி மோசடியில் ஈடுபட்டாரென்ற குற்றச்சாட்டின் பேரில் வெளிநாட்டு பயணம் தடைசெய்யப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கான தடை எதிர்வரும் அக்டோபர் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

04

## ஆகஸ்ட் 01 முதல் QR முறைமை அமுலுக்கு



எதிர்வரும் ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் வாகன இலக்கங்களின் இறுதி அடிப்படையில் எரிபொருள் விநியோகிப்பது முழுமையாக நிறுத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார். முதலாம் திகதி முதல் நாடுமுழுவதும் QR முறைமையின் கீழே எரிபொருள்

04

## ஆர்ப்பாட்டக்காரர்களால் அபகரித்த துப்பாக்கி மீட்பு

### தியவன்னாவ பாலத்தின் அடியில் கிடந்தது



ஜூலை மாதம் 13 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு அருகில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவ சிப்பாய் ஒருவரிடமிருந்து ஆர்ப்பாட்டக்காரர்களால் அபகரிக்கப்பட்ட துப்பாக்கி கடற்படையினரால்

04

### எரிசக்தி முகாமைத்துவ செயற்பாடு;

## வெளிச் சக்திகளுக்கு வழங்க முனைவது ஆபத்தான ஒன்று

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை



எமது நாட்டின் எரிசக்தியை முகாமைத்துவப்படுத்தும் செயற்பாட்டு ரீதியான அதிகாரத்தை வெளிநாடுகளுக்கு வழங்கி, நாட்டின் மின்விளக்கு சுவிட்சை வெளிநாடுகளிடம் ஒப்படைப்பதன் மூலம் நாட்டை இருளில் மூழ்கடிக்கும் நிலையே

04

## கொடுத்த வாக்கை மறவாத நீதிபதி இளஞ்செழியன்

### சகலரையும் நெகிழவைத்த செயற்பாடு



நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய போது அவரது மெய்பாதுகாவலராக இருந்த பொலிஸ் சார்ஜன்ட்

04

## வடக்கு - கிழக்கிற்கான சுயாட்சி திட்டம் ஜனாதிபதி ரணிலிடம்

த.ம.தே.கூ CV விக்கி நம்பிக்கை



03

### இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக

## கடல் வழியாக தமிழகம் சென்ற போலந்து நாட்டவர்

### இந்திய பொலிஸாரால் கைதானார்




இலங்கையிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் தமிழகத்துக்குச் சென்ற போலந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம்

04

## முட்டையின் விலை மேலும் அதிகரிப்பு

### ரூ. 55ஐ தாண்டும் நிலையில்!



முட்டை விலை மேலும் அதிகரித்துள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். எரிபொருள் தட்டுப்பாடு

04

## மின்வேலியில் சிக்கி 11 வயது சிறுவன் பலி

### வெல்லவாய பகுதியில் சோகம்




வெல்லவாய – கொட்டவெஹெரகல பிரதேசத்தில் 11 வயதுடைய சிறுவன் ஒருவன், வன விலங்குகளுக்காக பொருத்தப்பட்ட சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி, மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக

04

### கதிர்காமம் செல்லும் வாகனத்தில்

## எரிபொருள் பெற வரிசையில் காத்திருந்த 'மியன்ராஜா'



வாகன இலக்கத் தகட்டின் அடிப்படையில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான அறிவிப்பு வெளிவந்த போதிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நாளாந்தம் வரிசை கட்டுக்கடங்காது காணப்படுகின்றது.

சில எரிபொருள் நிரப்பு

04

# பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸுக்கு கனடாவில் அரச தலைவர்கள் வரவேற்பு

பரிசுத்த பாப்ரசர் பிரான்ஸிஸ் திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டு கனடா சென்றுள்ளார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை கனடாவின் எட்மன்ட் நகரை அவர் சென்றடைந்தார். பாப்பரசரின் 37 ஆவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

"ஒன்றிணைந்து நடப்போம்" என்ற தலைப்பில் நடைபெறும் 37வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணமாக பரிசுத்த பாப்பரசர் கனடா சென்றமை குறிப்பிடத்தக்கது. இத்திருத்தூதுப் பயணம் குறித்த செய்திகளை வெளியிடுவதற்கென, எண்பது வெளிநாட்டு செய்தியாளர்களும் சென்றிருந்தனர்.

பரிசுத்த பாப்பரசரின் 37வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணம், ஒரு தவத் திருப்பயணமாக அமைந்துள்ளது. வட அமெரிக்காவிலுள்ள கனடாவின் பூர்வீக இன மக்களுக்கு, கடந்த காலத்தில், குறிப்பாக கிறிஸ்தவ சபைகளால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு மன்னிப்புக் கேட்கவும், அவற்றால் அவர்கள் அடைந்த மனப்புண்களைக் குணப்படுத்தவும், அம்மக்களோடு, தனக்குள்ள நெருக்கத்தை வெளிப்படுத்தும், வகையிலும் அவரது பயணம் அமைந்திருந்தது. பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் தனது தலைமைப் பணியில் திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டுள்ள 56வது நாடாக கனடா உள்ளது.

## சர்வதேச செய்திகள்

# மியன்மாரில் நால்வருக்கு தூக்கு தண்டனை



மியன்மார் இராணுவ அரசாங்கம் நான்கு பேரை தூக்கிலிட்டு மரண தண்டனையை நிறைவேற்றி உள்ளது. இவர்கள் நால்வரும் தேசத்துரோகக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களாவர். 2021 ஜனவரியில் இவர்களுக்கு மியன்மார் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. இதில், சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ள மியன்மார் முன்னணி அரசியல்வாதியான ஆங்சாங்சுயின் சகாவும் உள்ளடங்குகின்றார்.

கிளர்ச்சியை தூண்டும் பாடல் மற்றும் இசையமைத்த ஒருவரும், கலகத்தை ஏற்படுத்தி பெண்களைக் கொலை செய்த ஒருவர் உட்பட இன்னுமிருவர் வேறு தேசத்துரோக செயல்களில் ஈடுபட்டதாக மியன்மார் இராணுவ அரசாங்கம் அறிவித்துள்ளது. ஜனநாயக விரோதமாக செயல்படும் இந்த அரசாங்கம் சர்வதேசத்திலிருந்து தனிமைப்படும் நிலைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈரான் அணு நகரத்தை தாக்க உளவு வேலை பார்த்தோர் கைது

ஈரான் அணுநிலைய நகரான இஸ்பஹான்ஸில் தாக்குதல் நடத்த திட்டமிட்ட இஸ்ரேல் உளவாளிகளை கைது செய்துள்ளதாக, ஈரான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. கடந்த சனிக்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தொடர்பு சாதனங்களை செயலிழக்கச் செய்யும் வகையில் கம்பிகளை துண்டித்தும், குண்டுகள் தயாரிக்கும் கரிமருந்துகளை சேகரித்துக் கொண்டிருக்கையிலுமே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானோரின் விபரங்கள் இதுவரை வௌியிடப்படவில்லை.

## ஹெய்ட்டியிலிருந்து வெளியேறியோரின் படகு விபத்து; பெண்களுட்பட 17 பேர் பலி

ஹெய்ட்டியில், நிகழ்ந்த படகு விபத்தில், 17 பேர் உயிரிழந்தனர். இதில், 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர். குழந்தைகள் உட்பட அறுபது பேர், இப்படகில் பயணித்துள்ளனர். அந்நாட்டில் இடம்பெறும் வன்முறைகளுக்கு அஞ்சி பலர் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். இவர்களும் நாட்டிலிருந்து வெளியேற படகில் சென்றிருக்கலாமென நம்பப்படுகிறது.அமெரிக்காவில் குடியேறும் நோக்கில் இவர்கள் சென்றிருக்கலாம்.

பகாமா கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த போது, இவர்கள் பயணித்த படகு திடீரெனக் கவிழ்ந்தது. இதனால் அதில் பயணம் செய்த அகதிகள் கடலுக்குள் மூழ்கினர். சிலர் கடலில் தத்தளித்தபடி உயிருக்கு போராடினர்.

இது பற்றி அறிந்த கடற்படையினர் அங்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதன்போது பலர் மீட்கப்பட்டனர். இந்த படகு விபத்தில் ஒரு கைக்குழந்தை, 12 பெண்கள் உட்பட 17 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக ஹெய்ட்டி பிரதமர் தெரிவித்தார்.

## புதிய அரசியலமைப்பு சர்வாதிகாரத்தை ஏற்படுத்துமென மக்கள் எதிராக வாக்களிப்பு

துனீசியாவில் ஜனாதிபதியால் புதிதாக அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள அரசியலமைப்பை ஏற்பதா, இல்லையா என்பது குறித்து பொதுமக்களின் கருத்தை அறியும் பொருட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பு ஜனாதிபதியை சர்வாதிகாரியாக மாற்றும் எனத் தெரிவித்து பலர், இந்த அரசியலமைப்புக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

மேலும், இவ்வாறு புதிய அரசியலமைப்பு அறிமுகஞ்செய்யப்படுவதை எதிர்த்து, கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மக்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு ஈடுபட்ட சிலரை பொலிஸார் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. கைதான அனைவரும் உள்நாட்டு அமைச்சிடம் பொலிஸாரால் கையளிக்கப்பட்டனர். ஜூலை 25 இல், அதாவது திங்கட்கிழமை துனீசிய பாராளுமன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு, புதிய அரசியலமைப்பை அறிமுகஞ்செய்ய அந்நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டார். இதுபற்றி ஏற்கனவே, அறிவிக்கப்பட்டதால் கடந்த வாரம் முதல் துனீசியாவின் முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டன. இதைக் கட்டுப்படுத்துவதற்காக அங்கு புதிய அரசியலமைப்பு அவசியமா, இல்லையா என்பது குறித்து சர்வஜனவாக்கெடுப்பு நேற்று நடாத்தப்பட்டது.

இதில், பெரும்பாலானோர் புதிய அரசியலமைப்பு தேவையில்லை என, வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

# பெரியம்மை தடுப்பூசியை குரங்கு அம்மை நோய்க்கு பயன்படுத்த ஐ.யூனியன் அனுமதி

**(கோபென்ஹேக்)**

பெரியம்மை நோய்க்கான தடுப்பூசியை குரங்கு அம்மை நோய்க்கு பயன்படுத்த ஐரோப்பிய ஆணையம் அனுமதியளித்துள்ளது.

உலக அளவில் 72 நாடுகளில் குரங்குஅம்மை நோயால் கிட்டதட்ட 16,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை அடுத்து இந்நோயை உலக சுகாதார நிறுவனம் பொது அவசர நிலையாக அறிவித்தது. இந்நிலையில், பெரியம்மை நோய்க்கான தடுப்பூசியை குரங்கு அம்மை நோய்க்கு பயன்படுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஐரோப்பிய ஆணையம் அனுமதியளித்துள்ளது. டென்மார்க்கை சேர்ந்த மருத்துவ நிறுவனம் தயாரித்துள்ள இத்தடுப்பூசி குரங்கு அம்மை நோய் பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய ஒன்றியத்தால் இமான்வேக்ஸ் தடுப்பூசி பெரியம்மை நோய்க்கான தடுப்பூசியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இப்போது குரங்கு அம்மை மற்றும் பெரியம்மை ஆகிய இரு நோய்களுக்கும் இதனை பயன்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த இரு நோய்களை உண்டாக்கும் வைரஸ்களிடையே பொதுவான குணாதிசயங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரங்கு அம்மை நோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் என காய்ச்சல், தலைவலி, தசைவலி, முதுகுவலி ஆகிய அறிகுறிகள் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு இருக்கும். மேலும் உடலில் புண்கள் ஏற்படும், முகம், கை, கால்கள் போன்ற பகுதிகளில் புள்ளிகள், புண்கள் ஏற்படும்.குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்களுக்கும், அவர்களுடன் பொருட்களை பகிர்ந்துகொள்பவர்களுக்கும் இந்நோய் தொற்றக்கூடும் என்பதால் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

வெளியாட்கள் வந்து சென்ற பிறகு, அந்த இடங்களை சுத்தம் செய்ய வேண்டும், முகக்கவசம் அணிய வேண்டும், குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




**Quickee.lk:**

# இலங்கையின் இணைய வர்த்தக சந்தையில் இணையற்ற சேவைகளுடன் புதிய ஆரம்பம்

இலங்கையரின் விருப்பத்திற்குரிய டிஜிட்டல் சந்தையான Quickee.lk, தற்போது புதிய பரிணாமத்துடன், பன்முக பிரத்தியேக விநியோக சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது. இது முற்றுமுழுதாக புதிய தோற்றத்துடன், மேம்படுத்தப்பட்ட வர்த்தகநாமமாக, குடும்பங்களுக்கு அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கும் நோக்குடன் மீளுருவாக்கப்பட்டுள்ளது.

Quickee.lk, இத்தகைய ஒப்பற்ற விநியோக சேவையை தன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கக்கூடிய காரணம், இலங்கையில் சொந்த விநியோகப்படுத்தல் வலையமைப்பைக் கொண்ட ஒரே ஒன்லைன் சந்தை என்பதாலாகும். ஏனைய உள்நாட்டு ஒன்லைன் சந்தைகளிடம் இல்லாத, இறுக்கமான தொடர் விநியோகச் சங்கிலி ஒருங்கிணைப்பைப் பெற்றதனால் ஒப்பற்ற நன்மையை Quickee.lk வழங்குகிறது. இதன் மூலம், பொருட்கள் சிறந்த முறையில் பாதுகாப்பாக கையாளப்படும் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. குளிர்சாதனப் பெட்டி போன்ற பாதுகாப்பான பொருட்கள் முதல் துரித உணவுகளை கொண்டு செல்வது உள்ளிட்ட அனைத்து வகையான தெரிவுகளையும் மற்றும் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் Quickee.lk ஒன்லைன் வணிக சந்தையானது விளங்குகிறது.

Quickee.lk நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி, சமி அக்பர் அவர்கள் இது தொடர்பில் குறிப்பிடுகையில், "Convenience Delivered (சௌகரியம் உங்கள் கையில்) எனும் வாக்குறுதியை நிறைவேற்றுவதில் மிகவும் பொறுப்புணர்வுடன் இருக்கவேண்டும் என்ற சவால்மிக்க நோக்குடன், ஒவ்வொரு இலங்கையருக்கும் பிரத்தியேக சேவைகளை வழங்கி ஒரே கூரையின் கீழ் அனைத்தையும் வழங்கும் 'One Stop Shop' வர்த்தக நாமமாக திகழ்கின்றோம். இச்சேவையானது தினமும் அதிகாலை 3 மணி வரை வழங்கப்படுகின்றது. ஒரு Quickee.lk சேவை உதவியாளர், உங்கள் ஷொப்பிங் பட்டியலை பெற்று, உங்கள் சார்பில் பல்வேறு கடைகளுக்குச் சென்று, அவற்றை கொள்வனவு செய்வதுடன், அவற்றை ஒரே நேரத்தில் உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பார். இதன் மூலம் நீங்கள் உங்கள் நேரத்தை மீதப்படுத்தலாம் என்பதுடன், இதன்போது உங்களது முக்கியமான விடயங்களில் நீங்கள் கவனம் செலுத்த வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது. Quickee.lk மட்டுமே தற்போது இலங்கையில் இந்த சேவையை வழங்கும் ஒரேயொரு ஒன்லைன் சந்தையாகும்." என்றார்.

## மகளிருக்கான அணகி பிரத்தியேக கிரடிட் கார்ட்கள் மூலம் புதிய சாதனை படைத்துள்ள கொமர்ஷல் வங்கி

மகளிருக்கு மட்டுமான கிரடிட் கார்ட் ஒன்றை அறிமுகம் செய்துள்ளதன் மூலம் கொமர்ஷல் வங்கி, இந்த வாடிக்கையாளர் பிரிவில் பெண்களை வலுவூட்டும் தனது அர்ப்பணத்துக்கான புதிய வியாக்கியானத்தை ஏற்படுத்தி உள்ளது.

பல்வேறு விஷேட நன்மைகளுடன் கோல்டன் மற்றும் பிளேடினம் பிரிவுகளில் இவை வழங்கப்படவுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது.கிரடிட் கார்ட அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதம நிர்வாக அதிகாரி



சனத் மனதுங்க (மத்தியில்) அணகி கிரடிட் கார்ட் அறிமுக நிகழ்வின் போது (இடமிருந்து) தனியார் வங்கிப் பிரிவு பிரதிப் பொது முகாமையாளர் திலக்ஷன் ஹெட்டிஆரச்சி, தனியார் வங்கிப் பிரிவு IT உதவிப் பொது முகாமையாளர் மிதிலா ஷாமினி, தனியார் வங்கிப் பிரிவு ஐஐ உதவிப் பொது முகாமையாளர் திருமதி. தர்ஷனி பெரேரா, சந்தைப்படுத்தல் பிரதி பொது முகாமையாளர் ஹஸ்ரத் முனசிங்க ஆகியோருடன் காணப்படுகின்றார்.







SLTMOBITEL, தேசியநீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கை யொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இதில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தவிசாளர் நிஷாந்த ரணதுங்க மற்றும் பொது முகாமையாளர் திலின விஜேதுங்க மற்றும் SLTஇன் பிரதமநிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க மற்றும் பிரதம வர்த்தக மற்றும் மொத்த சேவைகள் அதிகாரி லக்மால் ஜயசிங்க ஆகியோர் கைச்சாத்திட்டனர். SLTMOBITEL இனால் பரிபூரண அழைப்புநிலைய தீர்வு 1939 எனும் கட்டணமற்ற தொலைபேசிஇலக்கத்தை தேசியநீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினை நாடும் மக்களுக்கு வழங்கும்.

## ஒன்றிணைக்கப்பட்ட Batta HT2 வாகனங்கள் அறிமுகம் செய்யும் DIMO




DIMO, Tata Motors Limited உடன் இணைந்து, உள்நாட்டில் ஒன்றிணைக்கப்பட்ட (assembled) DIMO Batta HT2 வாகனங்களின் முதல் தொகுதியை அறிமுகப்படுத்தியுள்ளது. நாளாந்தம் 3 முதல் 4 வாகனங்கள் எனும் உற்பத்தித் திறன் கொண்ட வெலிவேரியவிலுள்ள களஞ்சிய மையத்தில் உள்ள DIMO வாகன ஒன்றிணைத்தல் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட, உள்நாட்டில் ஒன்றிணைக்கப்பட்ட DIMO Batta HT2 வாகனங்களின் முதல் தொகுதி, அண்மையில் வாடிக்கையாளர்களிடம் கையளிக்கப்பட்டது.DIMO நிறுவனத்தின் தலைவரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே, DIMO Batta HT2 வாகன அறிமுகம் தொடர்பில் கருத்துத் வெளியிடுகையில், "எந்தவொரு வகையான பொருளாதாரத்தின் வளர்ச்சியிலும் வாகனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தாம் சேவை வழங்கும் சமூகங்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளை ஊக்குவிப்பதற்கு எப்பொழுதும் முன்னிற்கும் ஒரு நிறுவனம் எனும் வகையில், முதன்முறையாக உள்நாட்டில் ஒன்றிணைக்கப்பட்ட DIMO பட்டா வாகனங்களை அறிமுகப்படுத்தும் இந்த நம்பமுடியாத மைல்கல்லை எட்டுவதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்." என்றார்.

## உலகளாவிய வெப்பநிலையை குறைக்க SBTi க்கு உறுதியளித்துள்ள Hayleys Fabric

*உலகளாவிய வெப்பநிலையை 1.5 டிகிரி செல்சியஸாக குறைக்க SBTi க்கு உறுதியளித்துள்ளது South Asia Textiles*

*ஜவுளி உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் Hayleys Fabric PLC, பசுமை இல்லவாயு (GHG) உமிழ்வைக் குறைப்பதற்கும் புவி வெப்ப நிலையை 1.5பாகை செல்சியஸாக கட்டுப்படுத்துவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட உலகளாவிய SBT திட்டத்தில் (SBTi) உலகின் முன்னணி நிறுவனங்களில் தமதுபெயரை இணைத்துள்ள இலங்கையின் முதலாவது ஜவுளி உற்பத்தி நிறுவனம் என்பதுடன் நாட்டின் நான்காவது உள்ளூர் உற்பத்தி நிறுவனமாகவும் உள்ளது.*

*"எங்கள்தாய் நிறுவனமான Hayleys PLC மூலம் Hayleys Lifecodeஐ அறிமுகப்படுத்தியதன் மூலம், ஐக்கியநாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளை (UNSDGs) நோக்கிய நமது செயல்திறனை அடைய எங்களுடைய சொந்த தனிப்பயனாக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட இலக்குகளை நாங்கள் அறிமுகப்படுத்தினோம். SBTiக்கான எங்கள் அர்ப்பணிப்புடன், மேலும் நிலையான பிராண்டுகளுக்கான வளர்ந்துவரும் வாடிக்கையாளர் தேவையை எங்களால் பூர்த்தி செய்யமுடிந்தது மற்றும் இன்னும் பெரிய போட்டிநன்மைகளைப் பெறமுடிந்தது." என South Asia Textiles மற்றும் HayleysFabric பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஹான் குணதிலக தெரிவித்தார்.*



தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜுலை 26 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN
தினகரன்


**தொழுகை நேரம்**

24 முதல் 29 வரை

சுபஹ் - 04.42
லுஹர் - 12.18
அஸர் - 03.42
மஃரிப் - 06.31
இஷா - 07.46

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 10

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 07.30 - 9.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



## பெற்றோல் திருடியவரின் தாக்குதலில் வாகன உரிமையாளர் பலி

பொரளை காசல் வீதி பகுதியில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தில் இருந்து பெற்றோல் திருடியமை தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து வாகனத்தின் உரிமையாளரை மற்றுமொரு நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று (25) காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளை காசல் வீதியில் வசித்துவந்த 40 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதேவேளை, சந்தேக நபர் அதே பகுதியை சேர்ந்த 29 வயதுடையவர் என்று விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சந்தேக நபரை கைதுசெய்துள்ளதாகவும் அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.



வரலாற்று சிறப்பு மிக்க சேதவத்த வெஹரகொட விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமய வழிபாடுகளில் ஈடுபட்ட போது பிடிக்கப்பட்ட படம். இச்சமயம் அம்பேபொல ஞானலோக தேரர் தலைமையில் தேரர்கள் பிரித் ஓதி ஜனாதிபதிக்கும் நாட்டுக்கும் ஆசி வழங்கியதோடு சமய விவகார, புத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, கொழும்பு மாவட்ட ஐ.தே.க முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். பைரூஸ் ஹாஜியார் உட்பட பலரும் நிகழ்வுகளில் கலந்து கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

### ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டுள்ள:

## ஜனாதிபதி செயலகத்தின் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையகப்படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி செயலகம் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முதல் வழமைபோன்று செயலகத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தில் அதிகாரிகள் மட்டத்திலுள்ளோர் தமது கடமைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அந்த வகையில் ஜனாதிபதி மிக விரைவில் ஜனாதிபதி செயலகத்திற்கு வருகைதந்து தமது கடமைகளை மேற்கொள்வாரென்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.



ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலகத்தின் திருத்த வேலைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் செயலகத்தின் உத்தியோக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்பதாக பாதுகாப்புச் செயலளார் கமல் குணரட்ன தலைமையிலான குழுவொன்று செயலகத்தில் கண்காணிப்பு நடவடிக்கையொன்றை மேற்கொண்டது. அதனையடுத்து நேற்று முதல் வழமைபோன்று செயலகத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களால் 12 தினங்களுக்கு முன் ஜனாதிபதி செயலகத்தின் ஒருபகுதி கையகப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

04

## SJB யின் 8 எம்.பி.க்களுக்கு அமைச்சரவை அமைச்சு பதவி

**– இடைக்கால அரசில் வழங்க அரசு முன்மொழிவு**





எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள அனைத்துக் கட்சி உள்ளடங்கிய அரசாங்கத்தில் இணையுமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அக்கட்சியைச் சேர்ந்த 8 எம்.பி.க்கள் அமைச்சர்களாகப் பதவியேற்க அரசு முன்மொழிந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

அடுத்த பதினைந்து நாட்களில் சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்படும் வரை தற்போதைய அமைச்சரவை இடைக்கால அமைச்சரவையாகச் செயற்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பதவி ஏற்றார்.அதனை தொடர்ந்து 18 பேர் கொண்ட இடைக்கால அமைச்சரவை பதவி ஏற்றது.இந்த அமைச்சரவையில் ஐ.ம.ச எம்.பிகள் இருவர் அமைச்சு பதவிகளை ஏற்றுள்ளனர்.இந்த நிலையில் ஏனைய ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பில் உள்ள கட்சிகள்,குழுக்களுக்கு அமைச்சு பதவி வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இதன் படி அவற்றுடன் இன்று முதல் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது. இதே வேளை சில எதிரணி எம்.பிகள் அமைச்சு பதவி ஏற்க தயாராவதாக அறிய வருகிறது.

## ஜனாதிபதி மாளிகையில் திருடப்பட்ட பித்தளை உருண்டைகளை விற்க முயன்ற மூவர் கைது



ஜனாதிபதி மாளிகையிலிருந்து திருடப்பட்ட 40 பித்தளை உருண்டைகளுடன் மூவர் வெலிக்கடை பொலிஸாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் (24) குறித்த பொருட்களை பழையபொருட்கள் விற்பனை செய்யும் கடையொன்றில் விற்பனை செய்யச் சென்றபோதே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 9ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்ததையடுத்து இந்த பித்தளை உருண்டைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

04

### பிரித்தானிய பல்கலைக்கழகங்களில்

## இலங்கை மாணவர்களை இணைப்பது நிறுத்தம்



பிரித்தானியப் பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்களை சேர்ப்பதை நிறுத்தியுள்ளதாக அங்கு கல்வி கற்க விசா கோரி விண்ணப்பித்த மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

2022 செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள புதிய தொகுதிகளுக்கான இலங்கை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை நிறுத்தியுள்ளதாக சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் அறிக்கையொன்றில் அறிவித்துள்ளது.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் நெருக்கடி மற்றும்

04

## வடக்கு கிழக்குக்கான சுயாட்சி திட்டம் ஜனாதிபதி ரணிலிடம்

**– த.ம.தே.கூ CV விக்கி நம்பிக்கை**



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுயாட்சியை ஏற்படுத்தக்கூடிய திட்டம் ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டிருப்பதாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஊடாக எவ்வாறு பொருளாதார நலனை பெறுவது என்பது குறித்தும் அவர் அவதானம் செலுத்துவார் என தாம்

04



நீதித்துறை சிறைச்சாலை விவகார மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ நேற்று அமைச்சில் வைத்து கடமைகளை பொறுப்பேற்றார். அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகளை படத்தில் காணலாம்.



ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று தனது அமைச்சில் பொறுப்புகளை ஆரம்பித்த போது எடுத்த படம். படத்தில் அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட உட்பட அதிகாரிகளும் காணப்படுகின்றனர்.

### CTB டிப்போக்கள் ஊடாக டீசல்;

## 50 சதவீத பஸ்கள் நேற்று முதல் சேவையில்

**தனியார் போக்குவரத்து சங்கம் தெரிவிப்பு**



இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் ஊடாக விநியோகிக்கப்படும் எரிபொருள் இரண்டு தினங்களுக்கு மாத்திரமே போதுமானது என அகில இலங்கை தனியார் பஸ் சங்க சம்மேளனத்தின் தலைவர் அஞ்சன பிரியஞ்ஜித் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நேற்று முதல் 50 சதவீதமான பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடிந்ததாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார்.

அதேபோல், இன்றைய தினம் தனியார் பஸ்கள் 50 சதவீதத்தினை நாம் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இன்றைய தினமும் நேற்றைய தினமும் இலங்கை போக்குவரத்து சபை

04

### முகநூலில் வெறுப்புணர்வு

## அ. நிஸ்வருக்கு விளக்கமறியல்!

கொழும்பு காலிமுகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவாக முகநூலில் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பதிவு ஒன்றை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி நீதிவான் திருமதி பவித்ரா சஞ்சீவனி பத்திரன நேற்று (25) உத்தரவிட்டுள்ளார்.

காலி கோட்டையைச் சேர்ந்த அஹமட் நிஸ்வர் என்ற சந்தேக நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவார்.

## எரிபொருள் பெற போலி இலக்கத்தகடு

**பொலிஸாரால் இருவர் கைது**



பதிவு செய்யப்படாத இலக்கத்துடன் மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் கொள்வனவு செய்த நபரொருவரை அங்குனகொலபெலஸ்ஸ பொலிஸார் (23) கைது செய்துள்ளனர்.

அங்குனகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் வசிக்கும் 20 வயதுடைய ஒருவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் அங்குனகொலபெலஸ்ஸவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் இருந்து எரிபொருள் பெற்றுக்கொண்டதையடுத்து அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அவர் மீது சந்தேகம் ஏற்பட்டு அவரை சோதனையிட்டுள்ளனர்.

எரிபொருள் எடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிளின்

04



வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி நேற்று (25) அமைச்சில் வைத்து தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்த்தன மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

### அத்தியாவசிய மருந்துகள்

## ஜோர்தான் இலங்கைக்கு நன்கொடை



சுகாதார அமைச்சின் வேண்டுகோளின் பேரில் ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதரகம் அத்தியாவசிய மருந்துகளை நன்கொடையாக இலங்கைக்கு வழங்க தீர்மானித்துள்ளது.

கடந்த 19ஆந் திகதி அனுப்பப்பட்ட அத்தியாவசிய மருந்துகள் தூதரகத்தின்

04

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 245.76 | 257.09 |
| கனடியன் டொலர் | 276.47 | 288.75 |
| யூரோ | 364.85 | 379.31 |
| ஜப்பான் யென் | 2.5880 | 2.6672 |
| சிங்கப்பூர் டொலர் | 255.88 | 266.36 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.26 | 445.24 |
| சுவிஸ் பிராங்க் | 361.49 | 377.54 |
| அமெரிக்க டொலர் | 358.53 | 368.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 959.90 | கட்டார் ரியால் | 98.40 |
| குவைத் டினார் | 1,177.04 | சவூதி ரியால் | 96.37 |
| ஓமான் ரியால் | 939.90 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.51 |

கோவிட்19 பரவல் மீண்டும் அதிகரிப்பு

# முகக்கவசம் அணிதல் உட்பட சமூக இடைவெளி கட்டாயம்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்து

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் மக்கள் முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றுமாறும் சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் தற்போது பரவிவரும் புதிய வகை கொரோனா வைரஸானது ஒமிக்ரோன் வைரஸின் திரிபு எனக் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அந்தவகையில் இந்த வைரஸ் மிக வேகமாக பரவக்கூடிய என்றும் சுகாதார அமைச்சர் தொற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் நிபுணர் டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களோடு ஒப்பிடுகையில் மேல் மாகாணம் உள்ளிட்ட மேலும் சில மாகாணங்களில் கொரோனா தொற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அததனைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், முன்பு கடைப்பிடிக்கப்பட்ட சுகாதார வழிமுறைகள் மீண்டும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அதற்கமைய முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பின்பற்றல், அவசியமற்ற நடமாட்டங்கள் மற்றும் பயணங்களைத் தவிர்த்தல் ஒன்றுகூடல்களை குறைத்துக்கொள்ளல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார.

நாட்டின் கொரோனா வைரஸ் பரவல் நிலை தற்போது கட்டுப்படுத்தக்கூடிய அளவிலேயே காணப்படும் நிலையில் சுகாதார வழிமுறைகளை முறையாகக் கடைப்பிடித்து சுகாதாரத் துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

### அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம்...

அவர் தெரிவித்துள்ளார்.

22ஆவது திருத்தத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதையடுத்து கடந்த ஜூன் 24 ஆம் திகதி அதுதொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டது. இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் நிர்வாக நடவடிக்கைகளில் சம்பந்தப்படுவதற்கு காணப்பட்ட வாய்ப்பு இந்த திருத்தத்தின் மூலம் தடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை, வேறொரு நாட்டின் பிரஜையான இலங்கையர் மக்கள் வாக்களிப்பின் மூலம் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படுவது இடம்பெறாத வகையில் அதில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் அல்லாதவொருவர் அவருக்கு அமைச்சரவை அந்தஸ்து அல்லது அந்தஸ்த்தற்ற மற்றும் பிரதி அமைச்சராக வருவது அதன்மூலம் தடை செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, அதுதொடர்பில் ஆளும்கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிக்கையில், 22ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அது பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### இந்தியாவின் 15 ஆவது...

முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் நேற்றுடன் நிறைவடைந்ததையடுத்து திரௌபதி முர்மு புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதியை தேர்வு செய்வதற்காக கடந்த 18 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி பதவிக்கு ஆளும் கட்சியான பாரதீய ஜனதா கூட்டணி சார்பில் திரௌபதி முர்முவும், எதிர்க்கட்சிகள் சார்பில் யஷ்வந்த் சின்காவும் போட்டியிட்டிருந்தனர். இந்தநிலையில், கடந்த 21 ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியாகியிருந்த நிலையில், பாரதீய ஜனதா கூட்டணி சார்பில் போட்டியிட்ட திரௌபதி முர்மு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அதற்கமைய, நேற்றைய தினம் ஜனாதிபதியாக பதவியேற்ற திரௌபதி முர்மு, இந்தியாவின் முதல் பழங்குடியின மற்றும் இரண்டாவது பெண் ஜனாதிபதி என்ற பெருமையை பெறுகின்றார்.

### வெளிச் சக்திகளுக்கு வழங்க...

ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் எரிசக்தி கட்டமைப்பை முன்னோக்கி கொண்டு செல்லும் வகையிலான புதிய மின்சாரக் கொள்கையை உருவாக்குவதே தமது நோக்கமாகும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், பெரும்பாலானோர் தனியார் மயமாக்கலை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குழுவை (24) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்த போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மின்சார சபை ஒரு தேசிய வளம் என்பதோடு அதைப் பாதுகாத்த வன்னம் முன்னேற்றுவதும், அதிக இலாபம் ஈட்டுவதற்கு தேவையான திட்டவரைவை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் முறையான மின்சார உற்பத்தி செயன்முறையை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் தொடர்பில் தாம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

### CID விசாரணைகளில்...

புகைப்படக்காட்சிகள் ஆகியவற்றை வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் பின்பே மேற்படி 20 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களது முகங்கள் பொலிஸ் தலைமையகத்தின் மூலம் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை கோரியுள்ளதாகவும் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அவர்களது ஆளடையாளம் வெளிப்பட்ட பின்னர் அவர்களை கைதுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்கு சில தரப்பினரால் கடந்த 09 ஆம் திகதி தீ வைக்கப்பட்டுள்ளது. அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவரின் புதல்வர் மறுநாள் டுபாய்க்கு பயணமானாரென்றும் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை அந்த சந்தேக நபர் டுபாயிலிருந்து இங்கிலாந்துக்கு தப்பிச்சென்றுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் சந்தேக நபரை நாட்டுக்கு கொண்டுவருவதற்காக சர்வதேச பொலிஸாரின் உதவியை குற்றப்புலனாய்வு திணைக்களம் கோரியுள்ளது.

அதுதொடர்பான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### ஆகஸ்ட் 01 முதல்...

விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.இன்று முதல் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் QR முறைமையின் கீழ் எரிபொருள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆட்டோகளுக்கு எரிபொருள் வழங்க எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஒதுக்கப்பட உள்ளதோடு பஸ்களுக்கு எரிபொருள் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதே வேளை தேர்ந்தெடுக்கப்பட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டும் நேற்று எரிபொருள் விநியோக அட்டை முறை அல்லது QR முறையின் கீழ் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறையை நேற்று முதல் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் தற்போதைய சூழ்நிலையில், நேற்றும் இது ஒரு முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப் பட்டதாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் பணிப்பாளர் தசுன் ஹகொட மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"இந்த முன்னோடித் திட்டத்தை நாடு முழுவதும் பல கட்டங்களாக விரிவுபடுத்துவதே எமது நோக்கம். இந்த திட்டம் தேர்வு செய்யப்பட்ட சில இடங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பை சுற்றியுள்ள பல பகுதிகளில் இத்திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்தினோம். மேலும், 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய 25 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்னோடித் திட்டத்தை நடத்தினோம். இதில் பெறப்பட்ட தகவல்களை கணனியில் உள்ளிட்டு அடுத்த சில நாட்களில் இந்த முறையை செயற்படுத்த எதிர்ப்பார்த்துள்ளோம்." எனவும் தெரிவித்துள்ளார்.

### சுகாதார வழிமுறைகளை...

ஹம்தானி தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களோடு ஒப்பிடுகையில் மேல் மாகாணம் உள்ளிட்ட மேலும் சில மாகாணங்களில் கொரோனா தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், முன்பு கடைப்பிடிக்கப்பட்ட சுகாதார வழிமுறைகள் மீண்டும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அதற்கமைய முகக் கவசம் அணிதல் சமூக இடைவெளியைப் பின்பற்றல் அவசியமற்ற நடமாடடங்கள் மற்றும் பயணங்களைத் தவிர்த்தல் ஒன்றுகூடல்களை குறைத்துக்கொள்ளல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றுமாறும்அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டின் கொரோனா வைரஸ் பரபல் நிலை தற்போது கட்டுப்பாடுத்தக்கூடிய அளவிலேயே காணப்படும் நிலையில் சுகாதார வழிமுறைகளை முறையாகக் கடைப்பிடித்து சுகாதாரத் துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் மக்களக் கேட்டுக்கொண்டார்.

### ஆர்ப்பாட்டக்காரர்களால் அபகரித்த...

மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லை, பொல்துவ சந்திக்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவ சிப்பாய் ஒருவரை தாக்கியதுடன் அவரிடமிருந்து ரி56 துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை அபகரித்துச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த துப்பாக்கி கடந்த சனிக்கிழமை (23) தியவன்னாவ ஓயா பாலத்தின் அடியிலிருந்து கடற்படையினரால் துப்பாக்கி மற்றும் வெற்றுத் தோட்டாக்கள் அடங்கிய மகசீன் மீட்கப்பட்டு வெலிக்கடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வெலிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### எரிபொருள் பெற வரிசையில்...

நிலையங்களில் குழப்பமான சூழலும் ஏற்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் எரிபொருள் வரிசையில் யானையொன்றும் எரிபொருளுக்காக காத்திருந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. கண்டியிலேயே இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

கதிர்காமத்தில் நடைபெறவுள்ள பெரஹெர உற்சவத்தில் கலந்து கொள்ளவுள்ள மியன் ராஜாவை ஏற்றிய பாரவூர்தியே வரிசையில் காத்திருந்தது.கண்டி தலதா மாளிகையிலிருந்து கதிர்காமத்தை நோக்கி புறப்படுவதற்கு முன்னர் யானையுடன் குறித்த பாரவூர்தி எரிபொருள் வரிசைக்குள் நுழைந்தது.

கண்டி கட்டுகஸ்தோட்டையில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் தனது வாய்ப்பு வரும் வரை யானையும் பாரவூர்தியில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஸ்டாலின், வசந்த உட்பட அறுவருக்கு...

கோட்டை நீதிமன்றத்தினால் வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதவான் திலின கமகே நேற்றைய தினம் அதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்வதற்கு முயற்சித்து வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அந்த நிலையில் அவர்களின் வெளிநாட்டுப் பயணத்துக்கான தடையை விதிக்குமாறும்

கொழும்பு கோட்டை பொலிஸார் விடுத்துள்ள வேண்டுகோளை கருத்திற்கொண்டுள்ள மஜிஸ்திரேட் நீதவான் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளார். அதன்படி வசந்த முதலிகே, லஹிரு வீரசேக்கர, ஜோசப் ஸ்டாலின், ரங்கன லக்மால், எரங்க குணதிலக்க மற்றும் ஜீவந்த பீரிஸ் அடிகளார் ஆகியோருக்கு எதிராகவே நீதிமன்றம் வெளிநாட்டுப் பயணத் தடையை விதித்துள்ளது.

அதேவேளை, இச்சம்பவத்துடன் தொடர்புடைய சமூக செயற்பாட்டாளர் ரவிந்து சேனாரத்ன மற்றும் ரத்கரவே ஜினரத்ன தேரர், நடிகர் ஜகத் மனுவர்ன, ஜோஹான் அப்புஹாமி உள்ளிட்ட 09 பேரை கொழும்பு கோட்டை பொலிஸார் கைது செய்து பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கடல் வழியாக தமிழகம்...

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர் இலங்கையில் குற்றச் செயல் ஒன்றுடன் தொடர்புடைய குற்றத்தில் கைதாகி சிறைத்தண்டனை அனுபவித்து, தண்டனைக்காலம் முடிவடைந்து விடுதலை செய்யப்பட்டவர் என தெரிய வந்துள்ளது.

தமிழகம் வேதாரண்யம் அருகே முனங்காடு பகுதியில் அநாதரவான நிலையில் (24) படகொன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த படகானது காற்று அடித்து (பலூன் போன்று) பாவிக்க கூடிய படகாகும். அதில் இருவர் பயணம் செய்ய கூடியவாறு வடிவமைக்கப் பட்டுள்ளது.சுழியோடிகள் பாவிக்கும் காலணி , படகுக்கு காற்று நிரப்பும் பம் , ஜாக்கெட் , சுழியோடிகள் கடலினுள் பாவிக்கும் கண்ணாடிகள் , 18கும் மேற்பட்ட தண்ணீர் போத்தல்கள் , மிதக்கும் பைகள் என்பனவும் படகிலிருந்து கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர் போலாந்து நாட்டை சேந்தவர் என தெரியவந்ததை அடுத்து இலங்கையில் இருந்து கடவுசீட்டு இன்றி சட்டவிரோதமான முறையில் தமிழகத்தினுள் ஊடுருவினார் என குற்றம் சுமத்தி மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### கொடுத்த வாக்கை மறவாத...

ஹேமச்சந்திர சுட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரியால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்நிலையில், அவரது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் கடந்த 22ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு ஹலவத்தை ஆராச்சிக்கட்டு பிரதேசத்தில் நீதிபதி இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது.

நீதிபதி இளஞ்செழியன் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய போது நீதிபதியை பாதுகாத்து வந்த பொலிஸ் சார்ஜன்ட் ஹேமச்சந்திர மரணமடைந்ததையடுத்து அவரது குடும்பத்தின் அனைத்துப் பொறுப்புகளையும் நீதிபதி இளஞ்செழியன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அதோடு ஹேமச்சந்திரவின் இரு பிள்ளைகளின் கல்வி விடயங்களை தொடர்ந்து கவனித்து வரும் நீதிபதி, சார்ஜன்ட் ஹேமச்சந்திர இறந்த போது அவரது குடும்பத்திற்கு புதிய வீடு ஒன்றையும் நிர்மாணித்து கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மின்வேலியில் சிக்கி...

பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று மதியம் குறித்த மாணவர் அயல் வீட்டுக்குச் செல்லும்போது, மின்கம்பியில் சிக்கியுள்ளார்.

மின்சாரம் தாக்கப்பட்ட அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மின்சார வேலியை பொருத்திய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை, பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### முட்டையின் விலை...

மற்றும் கோழி தீனின் விலை அதிகரிப்பு காரணமாக, முட்டைகளுக்கான விலை அதிகரித்துள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் முட்டை பாவனையும் அதிகரித்துள்ளதுடன், எதிர்காலத்தில் முட்டையொன்றின் விலை 55 ரூபா வரை அதிகரிக்கக்கூடும் என முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 2025 ரூவா வரை முட்டை விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### இருதரப்பு உறவுகளை...

ரஷ்யாவின் தூதுவர் யூரி மேட்டேரியை ( Yuri Materi) சந்தித்த போதே இந்த கடிதத்தை ஜனாதிபதியிடம் அவர் கையளித்தார்.

### கப்ரால் வெளிநாடு செல்ல...

மேற்படி சம்பவம் தொடர்பான மஜிஸ்திரேட் நீதவான் நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் ஹர்சன கெகுணவெல அதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜிட் நிவாட் கப்ரால் சார்பில் நேற்று ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். சம்பவம் தொடர்பான தனிப்பட்ட முறைப்பாட்டை தென் மற்றும் மத்திய மாகாணங்களில் ஆளுநராக பதவி வகித்த கீர்த்தி தென்னக்கோன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

முறைப்பாட்டாளரினால் சத்தியக் கடதாசி மூலம் நீதிமன்றத்துக்கு அனிவித்திருந்ததையடுத்து முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநரான அஜித் நிவாட் கப்ரால் நம்பிக்கையை மீறி செயற்பட்டுள்ளார் என்றும், நிதியை மோசடியான வழியில் பிரயோகித்துள்ளதையடுத்து 1937 இலக்கம் 07 திருத்த கட்டளை சட்டத்தின் இலக்கம் 56 (அ) (1) வின் கீழ் .குற்றமாக கருதப்படுவதாகவும் முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

### ஜனாதிபதி செயலகத்தின்...(03 ஆம் பக்கத் தொடர்)

அதேவேளை, அங்குள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதி மாளிகையில்...(03 ஆம் பக்கத் தொடர்)

சந்தேக நபர்கள் 28, 34 மற்றும் 37 வயதுடைய ராஜகிரிய ஒபேசேகரபுர பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என வெலிக்கடை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### வடக்கு கிழக்கிற்கான சுயாட்சி...(03 ஆம் பக்கத் தொடர்)

நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். எனவே, தாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க மேற்கொண்ட தீர்மானம் சரியானது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.இதேவேளை, தங்களது கோரிக்கைகளுக்கு எழுத்து மூலம் இணங்கியதன் காரணமாக ஜனாதிபதி தேர்வில் பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளித்ததாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.

### இலங்கை மாணவர்களை...(03 ஆம் பக்கத் தொடர்)

அந்நிய செலாவணி கட்டுப்பாடுகள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பின்படி, தற்போது சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பல இலங்கை மாணவர்கள் தங்களது பாடநெறிக் கட்டணத்தை உரிய நேரத்தில் செலுத்தத் தவறியுள்ளனர்.

இதனால், மாணவர்கள் படிப்பில் இருந்து விலக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்கி வருவதாகவும், பிரித்தானிய விசா மற்றும் குடிவரவு அலுவலகத்தில் மாணவர்களுக்கு

எதிராக புகார் அளிக்கும் அபாயம் உள்ளதாகவும் சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் பல்கலைக்கழகத்துக்கும் மாணவர்களுக்கும் கடும் பிரச்சினை ஏற்படும் என்று சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே விண்ணப்பம் ஏற்கப்பட்ட மாணவர்கள் மீதமுள்ள கல்விக் கட்டணத்தை எவ்வாறு செலுத்துவது என்பது குறித்த தெளிவான திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

50 சதவீதத்தை முன்பணமாக செலுத்திய மாணவர்கள் மீதித் தொகையை செலுத்த இயலவில்லை என உணர்ந்தால் அவர்களுக்கு பணம் திருப்பித் தரப்படும் என்று சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இலங்கை மாணவர்கள் 2023 ஜனவரிபெப்ரவரி மாதத் தொகுதிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் சேரும்போது முழு பாடக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும் என்று சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

### நேற்று முதல் 50 சதவீத...(03 ஆம் பக்கத் தொடர்)

நிரப்பு நிலையங்கள் ஊடாக 75 சதவீதமான எரிபொருள் கிடைக்கப் பெற்றுள்ளது. மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் நாட்களில் கட்டாயமாக சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை, வாரத்திற்கு 3 நாட்கள் மாத்திரம் பாடசாலை நடைபெற்றாலும் கூட எரிபொருள் விலை குறைப்பிற்கு அமைய கட்டணங்களை குறைக்க முடியாத நிலை காணப்படுவதாக அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சங்கத்தின் செயலாளர் லலித் சந்ரசிறி அறிவித்துள்ளார்.

### எரிபொருள் பெற...(03 ஆம் பக்கத் தொடர்)

இலக்கம் இந்த நாட்டில் பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் போலி இலக்கத் தகட்டுடன் எரிபொருள் எடுக்க வந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரம் பழைய பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வந்த போது போலி இலக்கத் தகடு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிளுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

### ஜோர்தான் இலங்கைக்கு...(03 ஆம் பக்கத் தொடர்)

ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் சாத்தியமானதுடன், இந்த உன்னத முயற்சிக்கு உதவுவதற்காக ஜோர்தான் முழுவதுமுள்ள பல ஆடைத் தொழிற்சாலைகளை அணுகியது.

கோவிட்19 தொற்றுநோய்களின் போது மேற்கொள்ளப்பட்ட முன்னைய நான்கு நன்கொடைகளுடன் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐந்தாவது நன்கொடை இதுவாகும்.

### குரங்கு அம்மை இலங்கையிலும்...

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் சர்வதேச பொது சுகாதார அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குரங்கு அம்மை நோய் குறித்து தெளிவுபடுத்தும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் சர்வதேச பொது சுகாதார அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் இந்நோயால் அதிக எண்ணிக்கையான ஆண்களே பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்பது இனங்காணப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இவ்வாறான பாலியல் தொடர்புகள் ஊடாக இந்நோய் பரவுவதாக இது வரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

மாறாக ஏற்கனவே இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கி பழகுதல் மற்றும் சுவாசத்தின் ஊடாகவே பரவுகின்றமை உறுதிப் படுத்தப்படுகிறது. குரங்கு அம்மை மனிதர்களிடமிருந்து மாத்திரமின்றி விலங்குகளிடமிருந்தும் பரவக் கூடும். இதன் அறிகுறிகளாக ஆரம்பகட்டத்தில் காய்ச்சலும் பின்னர் உடற் தோல் பகுதியில் படர் தடிப்புக்கள் என்பன ஏற்படும். இவை இலகுவில் இனங்காணப்படக் கூடிய அறிகுறிகளாகும்.

இரு பிரதான பிறழ்வுகள் மூலம் இந்த நோய் பரவுகிறது. குறித்த பிறழ்வுகள் 10 சதவீதம் மரணத்தை ஏற்படுத்தக் கூடியவை.

இவற்றை பிசிஆர். பரிசோதனை ஊடாக இனங்காண முடியும். அதற்கான வசதிகள் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஏனைய ஆய்வு கூடங்களிலும் காணப்படுகின்றன.

இதற்கான மருந்துகள் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சின்னம்மை நோய்க்காக பயன்படுத்தப்படும் தடுப்பூசியானது, குரங்கு அம்மை நோய்க்கு எதிராக 85 சதவீதம் சாதகமாக பலன் தரக்கூடியது.

இலங்கையில் இதுவரையில் இந்நோய் இனங்காணப்படவில்லை. எவ்வாறிருப்பினும் இது ஒரு வைரஸ் நோய் என்பதால் , எந்த சந்தர்ப்பத்திலும் பரவக் கூடிய அபாயமும் காணப்படுகிறது. எனவே முகக் கவசம் அணிதல் , நோய் அறிகுறிகள் காணப்படுபவர்களிடம் நெருங்கி பழகாதிருத்தல் என்பவற்றின் மூலம் இதனைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றார்.

# கடவுளோடு கொண்டுள்ள நெருக்கமான உறவின் வெளிப்பாடே செபமாகும்



மனிதனுக்கு அடிப்படைத் தேவையாக விளங்குவது சமூக வாழ்க்கை. இதனால் பிறரோடு பழகுதல், உரையாடுதல், தருதல், பெறுதல் என்பது மனித சமூக வாழ்வின் செயல்பாடுகள். இத்தகையச் செயல்பாடுகள் இல்லாத மானிட வாழ்க்கையை நாம் நினைக்க முடியாது.

ஆனால் மானிட சமூக உறவுக்கு அப்பாற்பட்ட ஒரு உறவு உண்டு. அதுதான் கடவுள் மனித உறவு. கடவுளை ஏற்றுக்கொள்ளுதல், அவரை நம்புதல், அவரைப் போற்றிப் புகழ்தல், அவரிடம் வேண்டுதல் செய்தல் போன்றவை கடவுள் மனித உறவின் கூறுகளாக உள்ளன. கடந்த ஞாயிறு விவிலிய வாசகங்கள் இறை மனித உறவின் ஓர் இன்றியமையாத கூறு. பண்பு என்று தெளிவாக்குகிறது. செபத்தைப் பற்றியத் தெளிவான சில சிந்தனைகளைத் தருகிறது.

இந்த உலகில் மக்கள் சிலர் எவ்வாறு செபத்தை நோக்குகிறார்கள்; சமூகத்தில் மற்றும் பொருளாதார தளத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்குக் கடவுள் ஏதாவது புதுமை செய்து குறுக்கு வழிகாட்டமாட்டாரா என்று பிரச்சனையைத் தீர்க்கும் ஆயுதமாகச் செபத்தைச் சிலர் கருதுகிறார்கள்.தனியாகவோ, அல்லது குழுவாகவோ அமர்ந்து கைதட்டி சத்தமாகப் பாடி செபித்தால் தன் மனப்பாரம் குறையும், உடல் வலியும் மாறும் என்றும் செபத்தை ஒரு மருந்தாகக் கருதி அணுகுபவர்கள் உண்டு.ஆண்டவரே நான் இத்தனை முறை உம்மிடம் வந்துள்ளேன். இத்தனை தடவை தவறாமல் நவநாட்களில் கலந்துள்ளேன். எனவே நான் விரும்பும் காரியத்தை எனக்குக் கட்டாயம் தரவேண்டும் என்று கடவுளை மடக்குவது போல செபத்தைக் கையூட்டாக பேரம் பேசி லஞ்சம் கொடுப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள்.சிலர் கடவுளை ஒரு கடுமையான நீதிபதியாக, காவல் துறை அதிகாரியாகக் கருதி தண்டனையிலிருந்து தப்பிக்க காணிக்கை, பாதயாத்திரை, ஆடு, கோழி வெட்டுதல், முடி எடுத்தல் என்றெல்லாம் கடவுளின் கோபத்தைத் தணிப்பதாகச் செபத்தோடு இணைத்துச் செய்கிறார்கள்.

ஆனால் உண்மையான செபம் என்ன? எத்தகைய மனநிலையோடு செபிக்க வேண்டும் என்பதைத் இன்றைய வாசகங்கள், கடந்த ஞாயிறு வாசகங்கள் தெளிவு படுத்துகின்றதன.

ஆபிரகாம் இறைவனோடு பேசுவது ஒரு நண்பனோடு பேசுவதுபோல உறவின் வெளிப்பாடாக இருக்கிறது. நல்லவர்கள் சிலர் இருந்தால் அதற்காக அந்த நகரையே, ஊரையே அழிக்கவேண்டாம் என்று கடவுளிடம் உரிமையோடு மன்றாடுகின்றார்.

செபம் என்பது கடவுளுக்கும் நமக்கும் இடையே நடக்கும் ஒரு உறவின் உரையாடல். செபம் என்பது மனித உள்ளத்தை இறைவன்பால் உயர்த்துவது. மனித உள்ளம் இறைவனோடு இரண்டறக் கலப்பது. இதனால் கடவுளோடு கொண்டிருக்கும் நெருக்கமான உறவின் வெளிப்பாடுதான் செபம். இதைத்தான் ஆபிரகாம் ஆண்டவரோடு வாதாட, கடவுள் கருணை, இரக்கம் உள்ளவர் என்பதையும், அதேநேரத்தில் நீதியும் நிறைந்தவர் என்பதையும் அந்த வாசகம் காட்டுகிறது.

செபிக்கும்போது தாம் கேட்டது கிடைக்கவில்லையே என்று நினைப்பவர்கள் பலர் உள்ளனர். இதனால் இனி நான் கோவிலுக்கும் செல்வதில்லை. ஆலயமும் போவதில்லை என்பவர்கள் ஏராளம்!

நம்மிடம் உள்ள தடைகள் என்ன? பாவத்தோடு இருக்கிறோமா? நாம் பாவத்தோடு எதையும் இறைவனிடம் பெற முடியாது. நமது குற்றங்களுக்காக முதலில் இறைவனிடம் மன்னிப்புப் பெற வேண்டும் (கொலோ.2:13)புனித பேதுரு (1 பேதுரு 1:15) கூறுவது போல உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராக இருப்பதுபோல நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மை உள்ளவராக இருங்கள். தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் (மத். 5:8) மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில், உங்கள் வானகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார் (மத். 6:15)

நாம் பரிசுத்த உள்ளத்தோடு கேட்கலாம். சில நேரத்தில் கேட்டும் பெறாமல் இருக்கலாம். ஏனெனில் அது நமக்குத் தேவையா என்பதை அறியாமல் இருப்போம். அறிந்த இறைவன் நமக்குத் தேவை இல்லையென்றால் தராமல் இருக்கலாம்.

அன்னை தெரெசாவிடம் இத்தனை ஆயிரம் பேரை வைத்து எவ்வாறு பராமரிக்க முடிகிறது என்று ஒரு தடவைக் கேட்ட போது, நற்கருணை நாதருக்காக நாங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் செலவிடுகிறோம். அவர் எங்களை வழிநடத்துகிறார் என்றார்.

# திருத்தந்தையின் கனடாவுக்கான திருத்தூதுப்பயணம்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கனடாவுக்கான திருத்தூதுப் பயணத்தைமேற்கொண்டுள்ளார். “ஒன்றிணைந்து பயணம்” என்ற தலைப்பைக்கொண்ட இப்பயணத்தில் கனடாவின் பூர்வீக இன மக்களோடு ஒப்புரவை உருவாக்குதல், மற்றும் அம்மக்களின் மனக்காயங்களைக் குணப்படுத்தல் ஆகிய நோக்கங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

திருத்தந்தை, ஆழ்ந்த பரிவிரக்கம் கொண்ட ஒரு மனிதராகத் திகழ்கிறார். கனடாவின் பூர்வீக இன மக்கள் எதிர்கொண்ட துயரங்களைக் கேட்டறியவும் அவற்றுக்கு ஒப்புரவு மற்றும் குணப்படுத்தல் ஆகியவை வழியாகப் பதிலளிக்கவும் திருஅவை தன்னை அர்ப்பணித்துள்ளது என்பதை வெளிப்படுத்துவதாக திருத்தந்தையின் இப் பயணம் அமைந்துள்ளது.

மேரி தெரேசா...

கனடாவின் பூர்வீக இனங்களின் பிரதிநிதிகளை திருத்தந்தை வத்திக்கானில் சந்தித்துள்ளார். அச்சந்திப்பில் அப் பிரதிநிதிகள் திறந்த மனதோடு பேசியதை திருத்தந்தை மிகுந்த கவனம், அக்கறை, மற்றும், பரிவன்போடு செவிமடுத்துள்ளார். அதன்போது திருஅவை அம்மக்களோடு உடனிருக்கிறது என்பதை திருத்தந்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

கனடா திருஅவை மேற்கொண்டுவரும் ஒப்புரவு மற்றும், குணப்படுத்தல் பயணத்தில் முன்னோக்கிச் செல்வதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இத் திருத்தூதுப் பயணம் ஓர் உந்துசக்தியாக அமையும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாகவும் கனடிய பேராயர் ஸ்மித் அவர்கள் தெரிவித்துள்ளார்.

28ஆம் திகதி கனடாவின் கியூபெக் நகரிலுள்ள புனித அன்னம்மாள் தேசிய திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றுவதுடன் கனடாவின் ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர், மேய்ப்புப் பணியாளர்கள் மத்தியில் மாலை திருவழிபாட்டை திருத்தந்தை நிறைவேற்றவுள்ளார்.




## ஹற்றன் திருச்சிலுவை ஆலயத்தில் புனித அன்னம்மாள் திருவிழா









ஹற்றன் திருச்சிலுவை ஆலயத்தில் புனித அன்னம்மாள் திருவிழா கடந்த ஞாயிறன்று கண்டி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. ஆயர் அவர்கள் வரவேற்று அழைத்துவரப்படுவதையும் திருவிழா கூட்டுத்திருப்பலி நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். பங்குத் தந்தை நியூமன் பீரிஸ் அடிகளாருடன் அருட்தந்தையர்கள் பலரும் திருவிழா திருப்பலியில் பங்கேற்றனர்.
(பட உதவி: மரிய அந்தனி)

# இறைவேண்டலின் வலிமையும் வல்லமையும்

# ஆபிரகாமின் தொடர் முயற்சியும் வெற்றியும்

பொதுக்காலத்தின் 17ஆம் ஞாயிறு வாசகங்கள் இறைவேண்டலின் வலிமையையும் வல்லமையையும் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

நமது அன்றாட ஆன்மிக வாழ்வில் இறைவனின் அருள்வரங்களைப் பெற்று வாழ்வதற்கு எவ்வித குறுக்கு வழியையும் நாம் கைக்கொள்ள முடியாது. மாறாக, ஆழமான இறைநம்பிக்கை, தொடர்முயற்சி, தாழ்ச்சி நிறை உள்ளம் ஆகிய மூன்று முக்கிய பண்புகள் நமக்குத் தேவைப்படுகின்றன.


கடந்த ஞாயிறு முதல் வாசகம் அதற்கான பெரும் எடுத்துக்காட்டாக ஆபிரகாமை முன்னிறுத்துகின்றது.

ஒரு மிகப்பெரிய நிறுவனத்தின் முதலாளி தனக்கு வயதாகி விட்டதால் அந்த நிறுவனத்தின் பொறுப்பை அவரிடம் வேலை செய்யும் ஒரு திறமையானவரிடம் ஒப்படைக்க முடிவு செய்தார்.

அனைவரையும் தன் அறைக்கு வருமாறு அவர் கட்டளையிட்டார். அனைவரும் வந்து சேர்ந்ததும். “உங்களில் ஒருவர்தான் இந்த நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும், அதனால் உங்களுக்கு ஒரு போட்டி வைக்கப் போகிறேன். அதில் யார் வெற்றியடைகிறீர்களோ அவர்தான் அடுத்த மேலாளர்” என்றார்.

“இப்போது என் கையில் ஏராளமான விதைகள் இருக்கின்றன இதை ஆளுக்கு ஒன்று கொடுப்பேன். இதை உங்கள் வீட்டில் ஒரு தொட்டியில் நட்டு, உரம் இட்டு, தண்ணீர் ஊற்றி நன்றாக வளர்த்து அடுத்த ஆண்டு கொண்டுவந்து என்னிடம் காட்ட வேண்டும். யாருடைய செடி நன்றாக வளர்ந்திருக்கிறதோ அவரே என் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றார்.

அனைவரும் ஆளுக்கொரு விதை வாங்கிச் சென்றனர். அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் முகலன் என்பவரும் ஒரு விதை வாங்கிச் சென்றார். தன் மனைவியிடம் முதலாளி கூறிய அனைத்தையும் சொன்னார். அவரின் மனைவி தொட்டி, உரம், தண்ணீர் என எல்லாம் அவருக்குக் கொடுத்து அந்த விதையை நடுவதற்கு உதவி செய்தாள். ஒரு வாரம் கழிந்தது. நிறுவனத்தின் அனைவரும் தங்கள் தொட்டியில் செடி வளர ஆரம்பித்து விட்டது என்று பேசிக்கொண்டனர்.



ஆனால் முகலனின் தொட்டியில் விதை இன்னும் முளைக்கவே இல்லை. ஒரு மாதம் ஆகியும் கூட விதை முளைக்கவே இல்லை. நாட்கள் கடந்தன. ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. அப்பொழுதும் தொட்டியில் விதை முளைக்கவே இல்லை. அப்போது, “நான் விதையை வீணாக்கிவிட்டேனோ” என்று புலம்பத் தொடங்கினார்.. ஆனால் தினந்தோறும் செடிக்குத் தண்ணீர் ஊற்றுவதை அவர் நிறுத்தவில்லை. தன் தொட்டியில் செடி வளரவில்லை என்று அலுவலகத்தில் யாரிடமும் சொல்லவுமில்லை.

ஓராண்டு கடந்து விட்டது எல்லோரும் தொட்டிகளை முதலாளியிடம் காட்டுவதற்காக எடுத்து வந்தார்கள். முகலன் தன் மனைவியிடம், “காலித் தொட்டியை நான் எடுத்து போகமாட்டேன்” என்று சொன்னார்.

அவரின் மனைவி அவரைச் சமாதானப் படுத்தி, “நீங்கள் ஓராண்டு முழுக்க உங்கள் முதலாளி சொன்ன மாதிரி செய்தீர்கள். செடி வளராததற்கு நீங்கள் வருந்த வேண்டியதில்லை. நீங்கள் உங்கள் செயலில் நேர்மையாக நடந்து கொண்டீர்கள். ஆகவே, தொட்டியை எடுத்துச் சென்று முதலாளியிடம் காட்டுங்கள்” என்றாள். அவரும் காலித் தொட்டியை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றார். எல்லோருடைய தொட்டிகளையும் பார்த்தார் முதலாளி. விதவிதமான செடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயரத்தில் இருந்தன. முகலனின் தொட்டியைப் பார்த்த அனைவரும் சிரிக்கத் தொடங்கினர். முதலாளி அனைவரையும் தன்னுடைய அறைக்கு அழைத்து, “நீங்கள் எல்லோரும் அருமையாகச் செடியை வளர்த்துள்ளீர்கள். உங்களில் ஒருவர் தான் இன்று மேலாளர் பொறுப்பை ஏற்கபோகிறார் என்றார்.

மீண்டும் ஒருமுறை எல்லாருடைய செடியையும் பார்வையிட்டார். முகலன் கடைசி வரிசையில் நின்றிருந்தார். அவரைத் தன்னருகில் வருமாறு அழைத்தார்.

முதலாளி அவரிடம், “உன் செடி எங்கே” என்று கேட்டார். அவரிடம் முகலன் ஓராண்டாக அந்த விதையை நட்டு உரமிட்டு தண்ணீர் ஊற்றியதை அவர் விலாவாரியாகக் கூறினார். முதலாளியோ அவர் தவிர அனைவரையும் உட்காருங்கள்’ என்றார். பிறகு முகலனின் தோளில் கையைப் போட்டுக்கொண்டு, “நமது நிறுவனத்தின் நிர்வாகத்தை ஏற்று நடத்தப் போகிறவர் இவர்தான்” என்றார்.

முகலனுக்கு ஒரே அதிர்ச்சி. தன் தொட்டியில் செடி வளரவே இல்லை பிறகு ஏன் நமக்கு இந்த பொறுப்பைக் கொடுக்கிறார். என்று குழம்பிப்போனார். “சென்றாண்டு நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு விதை கொடுத்து வளர்க்கும்படி சொன்னேன் அல்லவா, அவை அனைத்தும் அவிக்கப்பட்ட விதைகள் அந்த விதைகள் அவிக்கப்பட்டதால் அவைகள் முளைக்காது.

நீங்கள் அனைவரும் நான் கொடுத்த விதை முளைக்காததால் அதற்குப் பதில் வேறு ஒரு விதையை நட்டு வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால்முகலன் மட்டுமே நேர்மையாக நடந்து கொண்டார். ஆகவே அவரே, எனது நிறுவனத்தை நிர்வகிக்கத் தகுதியானவர் என்றார்.

சோதோம் கொமோரா நகரங்களில் வாழும் நீதிமான்களைக் காப்பாற்றுவதற்காக கடவுளோடு ஆபிரகாம் நடத்தும் உரையாடல் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. ஐம்பது பேர் தொடக்கி 10 பேர் என வல்லமை படைத்த கடவுளுடன் அவர் நடத்தும் பேச்சு வார்த்தை நிரபராதிகளான நீதிமான்கள் அநியாயமாகத் தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற அவரின் உயர்ந்த மனதைக் காட்டுகிறது.

ஆபிரகாமின் இந்த உரையாடலை இறைவேண்டலின் உரையாடல் என்றும் கூட நாம் அழைக்கலாம். இவ்வுரையாடலின் இறுதியில் ஆபிரகாமின் தொடர் முயற்சி வெற்றியடைவதைக் காணமுடிகிறது. இன்றைய நற்செய்தியில், இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் அவரை நோக்கி, “ஆண்டவரே, யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக் கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும்” என்றார். அவர் அவர்களிடம், “நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது இவ்வாறு சொல்லுங்கள்” என்று கூறி இறைவேண்டல் செய்யக் கற்றுக்கொடுக்கிறார் இயேசு.

இந்த இறைவேண்டல் மிக மிக எளிமையானது அதேவேளை எல்லா கூறுகளையும் உள்ளடக்கியுள்ளது. நமது கிறிஸ்தவ வாழ்வில் எல்லா நிலைகளிலும் இந்த இறைவேண்டலை தான் சொல்லுகின்றோம். கடந்த ஞாயிறு நற்செய்தி இரண்டு முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. முதலாவதாக, நமது இறைவேண்டலில் தொடர் முயற்சி இருக்கவேண்டும். இரண்டாவதாக, நாம் தாழ்ச்சிநிறை உள்ளத்துடன் நமது இறைவேண்டல்களை எழுப்பவேண்டும்.

இதே பகுதியை மத்தேயு நற்செய்தியாளர் வேறொரு சூழலில் எடுத்துக்காட்டுகிறார். அதாவது, இயேசுவே முன்வந்து இறைவேண்டல் செய்யக் கற்றுக்கொடுப்பதாகக் கூறுகிறார். இதற்கு முக்கியக் காரணம் பரிசேயர் எழுப்பிய இறைவேண்டல்களில் தற்பெருமையும், ஆணவமும், வெறும் வார்த்தைஜாலங்களும் தலைவிரித்தாடின. அதனால்தான் இயேசுவே முன்வந்து அவர்கள் எப்படி இறைவேண்டல் எழுப்பவேண்டும் என்று கற்றுக்கொடுக்கிறார். “நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம்; மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில், நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்” (மத் 6:7,8) என்று கூறி இந்த இறைவேண்டலை கற்றுக்கொடுக்கிறார்.

எந்த நிலையிலும் மாறுபடாமல் இருப்பவரின் பணிவு, மலையை விடப் பெரியது, உயர்வானது என்கிறார் வள்ளுவர் பெருந்தகை. ஆகவே, நமது அன்றாட ஆன்மிக இறைவேண்டல்களில் தொடர் முயற்சியும், தாழ்ச்சியும் தழைத்தோங்கட்டும்.

அருட்பணி
செல்வராஜ் சூசைமாணிக்கம்....

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 26

### குறள் தரும் சிந்தனை



வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்

ஏற்ற செயலையோ, எதிர்கொண்ட பகையையோ முற்றாக முடிக்காமல் விட்டுவிட்டால் அது நெருப்பை அரை குறையாக அணைத்தது போலக் கேடு விளைவிக்கும்.

# உலகை அச்சுறுத்தும் மற்றொரு வைரஸ் தொற்று குரங்கு அம்மை!

இலங்கை உட்பட உலகின் பல பகுதிகளிலும் அடிக்கடி பேசப்படும் சொற்களில் குரங்கு அம்மை என்கிற 'மங்கி பொக்ஸ்' என்பதும் தற்போது இடம்பிடித்திருக்கின்றது. குரங்கு அம்மை என்கிற வைரஸ் நோய்க்கு உள்ளாகின்றவர்களதும் பதிவாகும் நாடுகளதும் எண்ணிக்கையிலும் ஏற்பட்டுவரும் அதிகரிப்பே இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

இந்த வைரஸ் இற்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், தற்போது தான் உலகின் பல நாடுகளிலும் ஒரே நேர காலத்தில் பதிவாகும் நிலையை அடைந்திருக்கின்றது. குறிப்பாக கடந்த இரண்டு மூன்று மாத காலப்பகுதிக்குள் 70 க்கும் மேற்பட்ட நாடுகளில் பதிவாகியுள்ள இவ்வைரஸ், சுமார் 16 ஆயிரம் பேரைப் பாதித்தும் இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் உலக சுகாதார ஸ்தாபனம், குரங்கு அம்மை தொடர்பில் உலகளாவிய சுகாதார அவசர நிலையைப் பிரகடனப்படுத்தி இருக்கின்றது.

இந்த நிலையில் எமது அயல்நாடான இந்தியாவிலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நால்வர் இற்றை வரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறான சூழலில் இலங்கையின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத், குரங்கு அம்மை தொடர்பில் இலங்கையும் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்நோய் நாட்டுக்குள் வந்து சேருவதைத் தவிர்ப்பதில் அதிகூடிய கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொவிட் 19 தொற்றைப் போன்று குரங்கு அம்மை உலகிற்கு புதிய ஒன்று அல்ல. மாறாக இந்நோயின் மூல காரணியாக விளங்கும் வைரஸ் குரங்குகளில் காணப்படுவது 1950 களில் கண்டறியப்பட்டது. அதன் காரணத்தினால்தான் இவ்வைரஸ் குரங்கு அம்மை வைரஸ் என்றும் மங்கி பொக்ஸ் வைரஸ் எனவும் அழைக்கப்படலானது.

இவ்வைரஸில் இரண்டு தனித்தனி மரபியல் பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது பிரிவு மத்திய ஆபிரிக்க நாடுகளிலும், இரண்டாவது பிரிவு மேற்கு ஆபிரிக்க நாடுகளிலும் கண்டறியப்பட்டது. என்றாலும் காங்கோ பகுதியில் கண்டறியப்பட்ட வைரஸே கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளன.

குரங்கு, அணில், எலி போன்ற கொறித்து உண்ணக் கூடிய விலங்குகளில் காணப்படும் இவ்வைரஸ், 1970 இல் முதன் முறையாக மனிதனுக்கு தொற்றியிருந்தமை கண்டறியப்பட்டது. ஆபிரிக்க கண்ட நாடான கொங்கோவில் 09 மாதக் குழந்தையில்தான் இவ்வைரஸ் முதன் முதலில் அடையாளம் காணப்பட்டது. அதன் பின்னர் அவ்வப்போது நைஜீரியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் பதிவாகக் கூடிய நோயாகவே இத்தொற்று விளங்கி வந்தது. அதனால் இது ஆபிரிக்க கண்ட நாடுகளில் காணப்படக் கூடிய நோய்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

இவ்வைரஸ் 2018 இல் ஆபிரிக்க கண்ட நாடுகளுக்கு வெளியே முதற் தடவையாக ஐரோப்பிய கண்டத்திலுள்ள பிரித்தானியாவில் பதிவாகியது. நைஜீரியாவில் இருந்து வந்திருந்தவரிடமே அப்போது இவ்வைரஸ் அடையாளம் காணப்பட்டது. ஆனாலும் அச்சந்தப்பத்திலும் இத்தொற்று தற்போது போன்று தலைதூக்கவில்லை.

ஆனால் கடந்த மே மாதம் பிரித்தானியாவில் பதிவாகத் தொடங்கிய இவ்வைரஸ் இற்றை வரையும் ஐரோப்பிய கண்ட நாடுகள் உள்ளிட்ட 75 நாடுகளில் பதிவாகியுள்ளது. அத்தோடு 16 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இத்தொற்றுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதுவே இவ்வைரஸ் குறித்து உலகளாவிய ரீதியில் அதிக கவனம் செலுத்தப்படும் நிலைமை ஏற்படுத்தி இருக்கின்றது. குரங்கு அம்மை வைரஸின் தாக்கமானது பெரியம்மை மற்றும் சின்னமையை விடவும் குறைந்ததாகக் காணப்படுவதாகவே கருதப்படுகிறது. இது காற்றின் மூலம் பரவாத ஒரு வைரஸ் நோய். இத்தொற்றுக்கு உள்ளானால் காய்ச்சல், தலைவலி, உடல்வலி, முதுகுவலி, சோர்வு போன்ற அறிகுறிகள் வெளிப்படும். அந்த அறிகுறிகள் நான்கைந்து நாட்கள் வரை நீடிக்கும். அதனைத் தொடர்ந்து உடலில் சிவப்புப் புள்ளிகள் வெளிப்படும். அவையே கொப்புளங்களாக மாறும். அதேநேரம் உடல் தோலில் அரிப்பும் தோல் வெடிப்பும் கூட ஏற்படலாம்.

இந்நோய்க்கென இற்றை வரையும் விஷேட சிகிச்சை முறைகள் எதுவும் புழக்கத்திற்கு வரவில்லை. ஆனாலும் சின்னம்மை, பெரியம்மைக்கான சிகிச்சைகள் பலனளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட் 19 தொற்றின் பேராபத்தும் பேரச்சமும் வீழ்ச்சியடைந்து வந்த சூழலில்தான் இத்தொற்று பதிவாகத் தொடங்கி வியாபித்து வருகின்றது. அதனால் கொவிட் 19 தொற்றை போன்ற நிலையை குரங்கு அம்மையும் அடைந்து விடுமோ என்ற அச்சமும் மக்கள் மத்தியில் நிலவவே செய்கிறது.

அதன் காரணத்தினால் இந்நோய் தவிர்ப்பு தொடர்பில் முன்னவதானத்துடனும் விழிப்புணர்வுடனும் செயற்படுவது அவசியம். அதுவே ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பானதாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவின் ஒவ்வொரு ஏழைக் குடிமகனையும் பெருமைப்பட வைத்த புதிய ஜனாதிபதி நியமனம்

## பாரத தேசத்தின் 15 ஆவது குடியரசுத் தலைவராக திரௌபதி முர்மு நேற்று பதவியேற்பு



இந்தியாவின் 15 ஆவது குடியரசுத் தலைவராக (ஜனாதிபதி) திரௌபதி முர்மு நேற்று பதவியேற்றார். டெல்லி நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திரௌபதி முர்முவுக்கு, தலைமை நீதிபதி என்.வி.ரமணா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். ராம்நாத் கோவிந்தின் ஜனாதிபதி பதவிக் காலம் நிறைவடைந்த நிலையில், கடந்த 18 ஆம் திகதி புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்றது. மத்தியில் ஆளும் பா.ஜ.க தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் சார்பில் ஒரிசாவின் பழங்குடி இனத்தைச் சேர்ந்த திரௌபதி முர்முவும், எதிர்க்கட்சிகள் சார்பாக யஷ்வந்த் சின்ஹாவும் போட்டியிட்டனர்.

இத்தேர்தலில் திரௌபதி முர்மு அமோக வெற்றி பெற்று நாட்டின் புதிய ஜனாதிபதியானார். "நான் குடியரசுத் தலைவரானது ஒவ்வொரு ஏழை இந்தியனதும் சாதனை" என்று திரௌபதி முர்மு நெகிழ்ச்சியுடன் தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்தியா விடுதலை அடைந்த பின்னர் பிறந்த ஒருவர் ஜனாதிபதியாக பதவியேற்பது இதுவே முதல் முறை. நாட்டின் வரலாற்றில் பழங்குடி இனப் பெண் ஒருவர் ஜனாதிபதியாவதும் இதுவே முதல் முறையாகும். ஒரிசா மாநிலம் ராய்ரங்பூரில் பிறந்து முதலில் அரசுப் பணியில் இளநிலை உதவியாளர், பின்னர் ஆசிரியர் என்றெல்லாம் பணியாற்றி அரசியலுக்குள் நுழைந்தவர் திரௌபதி முர்மு.





உள்ளாட்சி பிரதிநிதி, எம்.எல்.ஏ, எம்.பி, அமைச்சர், ஆளுநர் ஆகிய பதவிகளில் அரசியலிம் உச்சம் தொட்ட திரௌபதி முர்மு நேற்று இந்திய தேசத்தின் ஜனாதிபதி அரியாசனத்தில் அமர்ந்துள்ளார். டெல்லி நாடாளுமன்ற மைய மண்டபத்தில் ஜனாதிபதி திரௌபதி முர்மு பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்காக நாடாளுமன்ற மைய மண்டபம் விழாக்கோலம் பூண்டிருந்தது. நேற்றுக் காலை 9.25 மணிக்கு ஜனாதிபதி மாளிகைக்கு திரௌபதி முர்மு சென்றார். அவருக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தமது குடும்பத்தினருடன் வாழ்த்துத் தெரிவித்தார். பின்னர் அங்கிருந்து 9.50 மணிக்கு ராம்நாத் கோவிந்த், திரௌபதி முர்மு ஆகிய இருவரும் நாடாளுமன்ற மைய மண்டபத்துக்கு குதிரைப்படை அணிவகுப்புடன் புறப்பட்டனர். நாடாளுமன்றத்தில் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, லோக்சபா சபாநாயகர் ஓம்பிர்லா உள்ளிட்டோர் திரௌபதி முர்முவை வரவேற்றனர். 21 ஆம் நூற்றாண்டை இந்தியாவின் நூற்றாண்டாக்குவதற்கு நாடு தயாராகி வருகிறது என்று ராம்நாத் கோவிந்த் அப்போது பெருமிதம் தெரிவித்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற மைய மண்டபத்தில் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி என்.வி.ரமணா, புதிய ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பின்னர் ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு 21 குண்டுகள் முழங்க மரியாதை வழங்கப்பட்டது.

# யாழ் - கிளிநொச்சி புகையிரதத்தில் சுற்றுலா சென்ற செல்வாநகர் ஆதவன் முன்பள்ளி மாணவர்கள்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கிடைத்த ஆனந்த அனுபவம்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தீவிர முயற்சியால் சாத்தியமாகிய யாழ்_கிளிநொச்சி விசேட புகையிரத சேவையில் கிளிநொச்சி செல்வாநகர் ஆதவன் முன்பள்ளி குழந்தைகள் காங்கேசன்துறை கடற்கரைக்கு சுற்றுலா சென்றனர்.

செல்வாநகர் அ.த.க.பாடசாலை அதிபர் சிவசம்பு மகேந்திரராஜாவின் ஏற்பாட்டில் அழைத்துச் செல்லப்பட்ட சுமார் 90 வரையான குழந்தைகள் புகையிரத பயணத்தையும் அனுபவித்து காங்கேசன்துறை கடலில் குளித்து மகிழ்ந்து திரும்பினார்கள். குழந்தைகள் மாத்திரமன்றி அவர்களது பெற்றோர், அயலவர் என்று ஏராளமானவர்கள் இந்தச் சுற்றுலாவில் இணைந்திருந்தனர் என்று தகவல் தெரிவித்த செல்வாநகர் அ.த.க. பாடசாலை அதிபர் மகேந்திரராஜா, பல பெற்றோர் தமக்கு இதுதான் முதல் புகையிரத பயண அனுபவம் என்று கூறி மகிழ்ந்ததாகத் தெரிவித்தார். காலை 9 மணியளவில் கிளிநொச்சி புகையிரத நிலையத்திலிருந்து விசேட யாழ்_கிளிநொச்சி புகையிரதத்தில் புறப்பட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர், அயலவர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள், 10.30 மணியளவில் காங்கேசன்துறை புகையிரத நிலையத்தைச் சென்றடைந்தார்கள். அங்கு புகையிரத நிலையத்துக்கு மிக அருகாமையில் இருக்கும் கடற்கரைக்குச் சென்ற அனைவரும், கடலில் குளித்து மகிழ்ந்ததுடன், ரம்மியமான சூழலை இரசித்து மகிழ்ந்ததாக அதிபர் மகேந்திரராஜா குறிப்பிட்டார்.







அதன் பின்னர், தம்முடன் எடுத்துச் சென்ற உணவை அங்கேயே உண்டு களித்துவிட்டு மீண்டும் 2 மணிக்கு அங்கிருந்து கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்ட புகையிரதத்தில் ஏறி, மாலை 4.30 அளவில் கிளிநொச்சியை வந்தடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நீண்ட காலமாக கொரோனா, எரிபொருள் நெருக்கடி என்று வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருந்த மாணவர்கள், ஆசிரியர், பெற்றோர் மற்றும் அவர்களது அயலவர் என்று ஏராளமானவர்களுக்கு இது நல்லதொரு மனமகிழ்வான சுற்றுலா அனுபவமாக இருந்ததாகத் தெரிவித்த அதிபர் மகேந்திரராஜா, இதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் ஏனையோரும் இந்தப் புகையிரத சேவையைப் பயன்படுத்தி ஒருநாள் சுற்றுலாப் பயணம் சென்று புத்துணர்ச்சி பெறலாம் என்று ஆலோசனை கூறினார்.

இவ்வாறு, கிளிநொச்சி மக்கள் தமக்கான புகையிரத சேவையைப் பெற்று அனுபவிக்க ஏற்பாடு செய்து தந்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கிளிநொச்சி மக்கள் சார்பில் தான் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கே. றுஷாங்கன்
(கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர்)

# சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிப்பு முயற்சியில் பெரெண்டினா நிறுவனம்

பெரெண்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மென்ட்ஸ் கம்பெனி லிமிடெட் (BMIC), 2007 ஆம் ஆண்டு தொடக்கம் கிராமப்புற விவசாய சமூகத்திற்கு பல்வேறுபட்ட வழிகளில் உதவிகளை வழங்கி வருகின்றது. BMIC வாடிக்கையாளர்களில் சுமார் 35% வீதமானோர் விவசாய நடவடிக்கைகளுக்காக கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர்.

கிராமப்புற பிரதேசங்களில் உயர்தர சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் புதிய திட்டமொன்றை பெரெண்டினா நிறுவனம் தொடங்கியுள்ளது. இத் திட்டத்தின் முதற் கட்டமாக 31 புதிய சேதனப் பசளை உற்பத்தி வியாபாரங்கள் நிறுவப்படவுள்ளன. இதற்கமைய 31 தொழில்முனைவோருக்கு துண்டாக்கும் இயந்திரங்கள் (Shredder Machines) மற்றும் பசளை பொதிசெய்யும் இயந்திரங்கள் (Bag Closer Machines) என்பன நன்கொடையாக வழங்கப்படவுள்ளன. இந்த துண்டாக்கும் இயந்திரங்கள், பசளை தயாரிப்பின் முதல் கட்ட நடவடிக்கையான கிளிரிசிடியா, பச்சை இலைகள், களைகள், வாழை இலை மற்றும் தண்டு, சல்வேனியா, காய்கறி கழிவுகள் மற்றும் பயிர் கழிவுகள் போன்ற மூலப்பொருட்களை சிறு சிறு துண்டுகளாக வெட்டுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்த இயந்திரங்கள், ஒரு மணி நேரத்தில் குறைந்தபட்சம் 500 கிலோ கிராம் மூலப்பொருட்களை உருவாக்கும் திறன் கொண்டவையாக அமைந்துள்ளன.

இதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு தொழில் முனைவோருக்கும் பாலிப்ரொப்பிலீன் (Polypropylene) பைகளை வியாபார நடவடிக்கையின் ஆரம்ப கட்டத்தின்போது BMIC நிறுவனம் வழங்கவுள்ளது. பெரெண்டினா நிறுவனத்தின் 11 செயற்பாட்டு மாவட்டங்களான அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கண்டி, கேகாலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, நுவரெலியா, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சேதனப் பசளை உற்பத்தி தொடர்பான விரிவான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.



வியாபார ரீதியான சேதனப் பசளை உற்பத்தியை ஒரு சாத்தியமான வியாபார முயற்சியாக ஊக்குவித்தல், பயிர்ச்செய்கைக்கு எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் உறுதி செய்யும் பொருட்டு விவசாயிகளுக்கு நல்ல தரமான சேதனப் பசளையை வழங்குதல், நுகர்வோருக்கு பாதுகாப்பான உணவு உற்பத்திகளை வழங்குவது, மண் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கும் சேதன பயிற்செய்கை நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வாடிக்கையாளர்களை ஊக்குவித்தல் என்பன இதன் நோக்கமாகும்.





தேர்ந்தெடுக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு துண்டாக்கும் இயந்திரங்கள் மற்றும் பசளை பொதி செய்யும் இயந்திரங்களை கையளிக்கும் உத்தியோகபூர்வ விழா அண்மையில் நடைபெற்றது. பெரெண்டினா கஹட்டகஸ்திகிலிய கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில் பிரதேச செயலாளர் ஆர். செந்தில், சமுர்த்தி முகாமையாளர் சி. பி. கமகெதர, பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி எஸ். ரணசிங்க, விதாதா வள நிலைய அதிகாரி ஏ. என். எம். பண்டார உட்பட பலர் பங்கேற்றனர்.

தெஹியோவிட்ட கிளை ஏற்பாடு செய்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக உதவி பிரதேச செயலாளர் எம். என். எஸ். வீரசிங்க, ஏற்றுமதி விவசாய உத்தியோகத்தர் திருமதி அனுபமா தர்மதாச மற்றும் விவசாய பயிற்றுவிப்பாளர் டி. எஸ். சி. சுகதபால ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொத்மலை கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற விழாவில் நயபான தோட்ட உதவி முகாமையாளர் குஷான், விவசாய பயிற்றுனர்களான திருமதி ஜீவந்தி, சரித், பொலிஸ் உத்தியோகத்தர்கள் திரு. குணசேகர, ஓஷேன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தம்பலகாமம் கிளை ஏற்பாடு செய்த வைபவத்தில் பிரதேச செயலாளர் திருமதி ஜே. ஸ்ரீபதி, விவசாய பயிற்றுவிப்பாளர் ஏ. எச். எம். அஷ்ஹர், தொழில்நுட்ப உதவியாளர் செந்தூரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பெரெண்டினா கல்முனைக் கிளையின் சிறப்பு அழைப்பாளர்களாக பிரதேச செயலாளர் டி. ஜே. அதிசயராஜ், விவசாயப் பயிற்றுவிப்பாளர் எஸ். சசிகரன் ஆகியோர் பங்குபற்றினர். பிரதேச செயலாளர் கே.விமலநாதன், உதவி பிரதேச செயலாளர் கே. கனகேஸ்வரன், மாவட்ட விவசாய பணிப்பாளர் ஆர். கோகுலதாசன், அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி வி. சம்சியா ஆகியோர் பெரெண்டினா முல்லைத்தீவு கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டனர்.

வவுனியா கிளையின் வைபவத்தில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ். பிரியதர்ஷினி, மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி லோகேஸ்வரி மற்றும் விவசாய திட்ட உத்தியோகத்தர் சுஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக விவசாயப் பிராந்தியப் பொறுப்பு பணிப்பாளர் திருமதி மாலினி மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதி திருமதி ரஜனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நெற்களஞ்சியசாலையை பயன்படுத்த கிளிநொச்சி விவசாயிகளுக்கு அழைப்பு

## சந்தைப்படுத்தும் ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக மாவட்ட அரச அதிபர் தெரிவிக்கிறார்

*(பரந்தன் குறூப் நிருபர்)*

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக அறுவடை செய்யும் விவசாயிகள் தமது நெல்லை மாவட்ட நெற்களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தி சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ள மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், அதனை பயன்படுத்தி விவசாயிகள் உரிய சந்தை வாய்ப்புக்கள் கிடைக்கும் போது விற்பனை செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கான சந்தை வாய்ப்பு இல்லாததால் தாங்கள் நட்டத்தை எதிர்கொள்வதாக விவசாயிகள் தெரிவித்திருந்தனர். இந்த விடயம் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகத்தில் அறுவடை செய்யும் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் நெல் சந்தைப்படுத்தும் சபையுடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதற்கிடைப்பட்ட காலங்களில் நெல்லை அறுவடை செய்துள்ள விவசாயிகள் அதற்கான சந்தை வாய்ப்பு குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவற்றை எமது மாவட்டத்தில் உள்ள நெற்களஞ்சிய சாலையில் அதாவது கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தில் அமைந்துள்ள அரச நெற்களஞ்சிய சாலையில் அதனை களஞ்சியப்படுத்தி அவற்றை உரிய முறையில் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளது. அதனை பயன்படுத்தி விவசாயிகள் அறுவடை செய்யும் சேமித்து சந்தை வாய்ப்பு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் விற்பனை செய்ய முடியும் என தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி மாவட்ட உணவுக் களஞ்சிய சாலை ஒன்று அமைக்கப்பட்டு கடந்த 2018 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

அதில் சுமார் 4000 மெட்ரிக் தொன் நெல்லை நன்கு உலர வைத்தது சுத்திகரித்து பொதிகளாக்கி எடையிடப்பட்டு களஞ்சியபடுத்தி வைக்கக்கூடிய வசதிகள் காணப்படுவதுடன் விவசாயிகள் இவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கும் சந்தர்ப்பத்தில் தங்களுடைய தேவைக்குரிய நிதியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

ஆனாலும் கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி களஞ்சியசாலையை குறிப்பிட்ட சில விவசாயிகள் மட்டுமே பயன்படுத்தி பெரிதும் நன்மை அடைந்து வருகின்றனர். தற்போது எரிபொருள் நெருக்கடி மற்றும் நெல்லுக்கான சந்தை வாய்ப்பின்மை காணப்படும் சந்தர்ப்பத்தில் இந்த நெற்கலைஞ்சியசாலையை விவசாயிகள் சரியாக பயன்படுத்தி நன்மையடைய முடியும் என களஞ்சிய சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# வவுனியாவில் சைக்கிள் விபத்துகள் அதிகரிப்பு

## வீதி விதிகளை கடைபிடிக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தல்

*வவுனியா விசேட நிருபர்*

வவுனியா மாவட்டத்தில் எரிபொருள் பிரச்சனை காரணமாக துவிச்சக்கரவண்டிகளின் பாவனைகள் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவுக்கான பொறுப்பதிகாரி ரோஷன் சந்திரசேகர முக்கிய அறிவித்தல் ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களில் மாத்திரம் துவிச்சக்கரவண்டிகளினால் 15க்கு மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் சிலர் படுகாயமும் அடைந்துள்ளனர். இவற்றில் இரவு நேரங்களில் பெரும்பாலான விபத்துக்குள் இடம்பெற்றுள்ளதுடன் விபத்துக்களுக்கு காரணமாக அமைந்துள்ளமை வெளிச்சமின்றி பயணிக்கும் துவிச்சக்கரவண்டிகளே ஆகும். எனவே வவுனியா மாவட்டத்தில் துவிச்சக்கரவண்டிகளில் செல்வோர் டைனமோ பொருத்திய லைட்களை பொருத்தியிருக்கவேண்டும் என்பதுடன் துவிச்சக்கரவண்டிகளில் பயணிப்பவர்கள் சாலை விதிகளை இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும்.

அத்துடன் துவிச்சக்கரவண்டிகளில் கூட்டமாக செல்வதை தவிர்க்குமாறும் இவற்றை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை முன்னெடுக்கபடவுள்ளதாகவும் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவுக்கான பொறுப்பதிகாரி ரோஷன் சந்திரசேகர மேலும் தெரிவித்தார்.

# வாள்வெட்டு சம்பவத்தில் மூவர் படுகாயம்

*சாவகச்சேரி விஷேட நிருபர்*

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு வீதிப் பகுதியில் சனிக்கிழமை (23) இரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் தனங்கிளப்பு வீதி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 40 மற்றும் 44வயதுடைய சகோதரர்களுடன் 34வயதுடைய பெண் ஒருவரும் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் 44வயதுடைய நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உரம், எரிபொருள் வழங்குமாறு கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

*யாழ்.விசேட நிருபர்*

டீசல், மண்ணெண்ணெய் மற்றும் இராசயன உரம் என்பனவற்றை வழங்குமாறு கோரி சங்கானை பிரதேச செயலகம் முன்பாக விவசாயிகள் நேற்றைய தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 12 விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த விவசாயிகளே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலகத்தின் வெளிப்புற வாயிலில் இருந்து பிரதேச செயலாக வளாகம் வரை சென்ற போராட்டக்காரர்கள் அங்கு பிரதேச செயலரை சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரினையும் கையெடுத்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட சங்கானை பிரதேச செயலர் திருமதி. பொ. பிரேமினி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

விவசாயிகளது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அரசாங்க அதிபருக்கு அனுப்பவுள்ளேன். விவ



சாயிகள் ஒன்றரை மாதங்களாக மண்ணெண்ணெய் இல்லாமல் சிரமப்படுகின்றனர். அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு வழிமுறையும் காணப்படவில்லை.

மேலும் சித்தங்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மூலம் சீரான எரிபொருள் விநியோக முறையினை பிரதேச செயலகத்தினால் செய்ய முடியாததன் காரணமாக அதனை பெற்றுக் கொடுப்பது சிரமமானது என நினைக்கிறேன். இதனை நான் அரசாங்க அதிபருக்கும் தெரியப்படுத்தியுள்ளேன்.

விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ள இந்தக் காலகட்டத்தில் விவசாயிகளுக்கு எரிபொருள் மிகவும் முக்கியமானது. எனவே அரசாங்க அதிபரிடம் இதுதொடர்பாக கலந்துரையாடி உரிய தீர்வினை வழங்க முடியும் என்றார்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்கள் கையளிப்பு



## குரலற்றவர்களின் குரல் அமைப்பினால் சி.வி.விக்னேஸ்வரன் எம்பியிடம் ஒப்படைப்பு

*பருத்தித்துறை விசேட நிருபர்*

நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்களை குரலற்றவர்களின் குரல் அமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனிடம் கையளித்தது.

நல்லூரில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்தில் நேற்று காலை குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் அவரை சந்தித்து கலந்துரையாடியதுடன் அரசியல் கைதிகளினுடைய விபரங்களையும் வழங்கினர். பாராளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவு செய்யும் போது அரசியல் கைதி விடுதலை உள்ளிட்ட சில நிபந்தனைகளுடன் ரணில் விக்ரமசிங்கவிற்கு விக்னேஸ்வரன் எம்.பி ஆதரவளித்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடும் போது அரசியல் கைதிகளின் விபரங்களை ஜனாதிபதியிடம் கொடுத்து அவர்களின் விடுதலைக்காக வலியுறுத்துவேன் என பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் இதன்போது உறுதியளித்தார்.

# யாழ்.மாவட்ட இ.போ.ச. பணி பகிஷ்கரிப்பு முடிவு

*யாழ். விசேட நிருபர்*

யாழ்.மாவட்ட இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் தமது பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தை நேற்றைய தினம் திங்கட்கிழமை மாலையுடன் கைவிட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட 57 வழித்தட இ.போ.ச பேருந்தின் சாரதி மற்றும் காப்பாளர் இருவரும் கல்கமுவ சாலை இ.போ.ச சாலை ஊழியர்களினால் தலாதகம எனும் பகுதியில் தாக்கப்பட்டனர். இந்த தாக்குதலை நடாத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இலங்கை போக்குவரத்து சபையின் யாழ் சாலை ஊழியர்கள் கடந்த இரண்டு தினங்களாக (ஞாயிறு , திங்கள்) பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கல்கமுவ பொலிஸாரினால், தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூவரை கைது செய்துள்ளதாக யாழ். மாவட்ட இலங்கை போக்குவரத்து சபையினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. இதேவேளை நேற்றைய தினம் திங்கட்கிழமை டீசல் கோரி யாழ்.மாவட்ட தனியார் பேருந்து சங்கங்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடாததால் , பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். பருத்தித்துறை தனியார் பேருந்து சங்கம் காலை 10 மணி வரையில் சேவையில் ஈடுபட்டமையால் வடமராட்சி பகுதிகளில் இருந்து பலர் யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் மீண்டும் வடமராட்சி செல்ல முடியாது பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கினர்.

# தொடர் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட இளைஞன் கைது



*(நாகர்கோவில் விஷேட நிருபர்)*

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக துவிச்சக்கரவண்டிகளை திருடிவந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் ஒரு தொகுதி துவிச்சக்கரவண்டிகளும் மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்ற திருட்டு தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைவாக விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிசார் நேற்று திங்கட்கிழமை (25) துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய நபரைக் கைது செய்ததுடன் ஒரு தொகுதி துவிச்சக்கரவண்டிகளையும் மீட்டதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# பதில் நிர்வாக அலுவலகராக பணி பொறுப்பேற்பு

*(தலைமன்னார் விஷேட நிருபர் )*

மன்னார் நகர, பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 49 கிராம அலுவலகர் பிரிவுகளுக்கான பதில் நிர்வாக அலுவலகராக நியமிக்கப்பட்ட அந்தோனி செபமாலை தல்மெய்டா கடந்த வெள்ளிக்கிழமை (22) தனது கடமையை மன்னார் பிரதேச செயலகத்தில் பொறுப்பேற்றார்.

அந்தோனி செபமாலை தல்மெய்டா, திரு.திருமதி ஆசீர்வாதம் அந்தோனி தல்மெய்டாவின் புதல்வன் ஆவார். முருங்கன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவனான இவர் 1994 ஆம் ஆண்டிலிருந்து 28 வருடங்கள் கிராம அலுவலகராக கடமையாற்றியர் ஆவார்.



இவர் யுத்த காலங்களில் மடு பிரதேச செயலகப் பிரிவில் இடம் பெயர்ந்து வாழ்ந்த மக்கள் மடு முகாமில் இருந்தபோது அங்கு முகாம் பொறுப்பாளராக இருந்ததுடன் தற்பொழுது சர்வமத குழு அமைப்பிலும் தேசிய சமாதான பேரவை அமைப்பிலும் இணைந்து நாடு மற்றும் மாவட்டத்தின் சமாதானத்துக்காக உழைத்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# வவுனியா இ.போ.ச. டிப்போ ஊழியர்கள் வேலைநிறுத்தம்

*ஓமந்தை விஷேட நிருபர்*

இலங்கை போக்குவரத்து சபை வவுனியா சாலை ஊழியர்கள் நேற்று பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

உதவி சாலை முகாமையாளர் (பொறியியல்) மாற்ற கோரியும் ஊழியர்களிற்கான பெற்றோலினை சீரான முறையில் வழங்க கோரியுமே பணி பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

இதன் காரணமாக இ.போ.ச வவுனியா சாலைக்குரிய பேருந்துகள் அனைத்தும் நேற்றையதினம் சேவையில் ஈடுபடவில்லை.

நேற்றையதினம் கல்வி அமைச்சினால் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டாலும் இ.போச வவுனியா சாலையினரின் பணிபகிஷ்கரிப்பால்



பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவரும் பெரும் சிரமத்திற்குள்ளாகினர்.

# கிழக்கின் குரல்



## வேளாண்மை அறுவடை; 6488 ஏக்கருக்கு 97,320 லீட்டர் டீசல் வழங்க ஏற்பாடு

நிந்தவூர் குறூப் நிருபர்

சிறுபோக வேளாண்மை அறுவடையை முன் னிட்டு, நிந்தவூர் பிரதேச விவசாயிகளுக்கு 97,320 லீட்டர் டீசல் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒரு ஏக்கருக்கு தலா 15 லீட்டர் வீதம் வழங்கப்படவுள்ளது.

இதன்பிரகாரம் 2,134 காணிச் சொந்தக்காரர்களுக்கு டீசல் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.ஏ. ஹார்லிக் தெரிவித்தார்.



நிந்தவூரில், இம்முறை 2,595 ஹெக்டயர் நிலப்பரப்பில் சுமார் (6,488) ஏக்கர் நெற்செய்கை காணிகளில் சிறுபோக வேளாண்மை செய்யப்பட்டிருந்தது. எரிபொருள் தட்டுப்பாடுகளால்,அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களின் கஷ்டத்தை போக்கும் பொருட்டே,இவர்களுக்கு டீசல் வழங்கப்படுகிறது.

இதேவேளை, இவ்விடயம் பற்றி கடந்த பிரதேச சபை அமர்வின் போது, நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர் கவனம் செலுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த நடைமுறைக்கு அமைவாக, முதல் வேளாண்மை அறுவடை செய்யப்படவுள்ள செங்கப்படை வடகண்டம், செங்கப்படை தென்கண்டம், செங்கப்படை மேல் கண்டம் மற்றும் மாட்டுப்பளை வடகண்டம் ஆகிய நான்கு கண்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, நேற்று (25) நிந்தவூர் தாஹிர் லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் வழங்கப்பட்டது.

## தாழங்குடா ஸ்ரீ பெரிய தம்பிரான் ஸ்ரீ கருமாரியம்மன் சடங்கு

ஆரையம்பதி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு தாழங்குடா அருள்மிகு ஸ்ரீ பெரியதம்பிரான் மற்றும் ஸ்ரீ கருமாரியம்மன் ஆலய வருடாந்த சடங்கு விழா எதிர்வரும் ஆடித்திங்கள் 3 /8/ 2022 புதன்கிழமை நள்ளிரவு திருக்கதவு திறத்தல் வைபவத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து நடைபெறும் ஏழு நாள் திருச் சடங்கில் எட்டாம் திகதி திங்கட்கிழமை மாலை ஆறு மணிக்கு மடைப்பெட்டி எடுத்து வரும் வைபவம் இடம்பெறும். அன்றைய தினம் நள்ளிரவு 12 மணிக்கு விநாயகப்பானை எழுந்தருளப் பண்ணுதலும் இடம்பெறும். மறுநாள் (09) செவ்வாய்க்கிழமை பெருமானின் அலங்கார பூஜைகள் இடம்பெற்று, பெரியதம்பிரான் மற்றும் ஸ்ரீ கருமாரியம்மனின் தீர்த்தம் மண்முனை வாவியில் இடம்பெற்று ஸ்ரீ கருமாரி அம்மனுக்கு கும்பம் சொரிதலும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் அன்னதானமும் இடம்பெறும். கிரியாகால நிகழ்வுகள் அனைத்தும் ஆலய பிரதம பூசகர்கள் கு.மகேந்திரன் மற்றும் சி.கனகசபை ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ளது. சடங்கு உற்சவ காலங்கள் அனைத்திலும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவது இவ்வாலயத்தின் மேலும் ஒரு சிறப்பம்சமென்பது குறிப்பிடத்தக்கது.



பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் முகமாக, அக்கரைப்பற்று தக்வா ஜும்மா பள்ளிவாசல் நிருவாகத்தினரால் கருங்கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. பயனாளி ஒருவர், இவற்றை பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

## "நட்சத்திர மாமணி" விருது வழங்கி கௌரவிப்பு



சாய்ந்தமருதைச் சேர்ந்த ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம். ஸாகிர் 'நட்சத்திரமாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தமிழக முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் திகதியை முன்னிட்டு, திண்டுக்கல் பசுமை வாசல் பவுண்டேஷன், குமரி மாவட்ட தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், கன்னியாகுமரி மாவட்ட காமராஜர் இளைஞர் வளர்ச்சி பேரவை, சேலம் மாவட்ட ஆத்தூர் ஸ்ரீ சக்ஸஸ் அகடமி & பவுண்டேஷன் ஆகிய அமைப்புகள் இணைந்து பல்துறை சாதனையாளர்களை கௌரவித்தது. "பெருந்தலைவர் காமராஜரின் மாமணி விருதுகள் 2022"வழங்கும் நிகழ்வில் இலக்கியத்துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக, கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது ஊரைச் சேர்ந்த ஊடகவியலாளரும் பல்துறைக்கலைஞரு மான, முஹம்மது சகீது முஹம்மது ஸாகிர், 'நட்சத்திர மாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## உகந்தமலை முருகன் ஆலயத்தில் சிரமதானப்பணிகள், பலர் பங்கேற்பு

வாச்சிக்குடா விஷேட நிருபர்

கதிர்காம யாத்திரிகர்களின் நன்மை கருதியும் ஆலய மகோற்சவம் நடைபெறுவதை முன்னிட்டும், உகந்தைமலை முருகன் ஆலயத்தில்,மாபெரும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆலையடிவேம்பு, திருக்கோவில், காரைதீவு, கல்முனை, நாவிதன்வெளி, களுவாஞ்சிக்குடி போன்ற பிரதேச செயலகங்கள் இப்பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற இப்பணியில், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

யாத்திரிகர்கள் தங்குவதற்கு வசதியான முறையில் ஆலய வளாகத்திலிருந்த பற்றைகள், குப்பைகள் அகற்றப்பட்டதுடன் நீராடுவதற்கு பயன்படுத்தும் கிணற்றை அண்டிய பகுதிகளும் தூய்மைப்படுத்தப்பட்டன.

கதிர்காம கந்தனை தரிசிக்கும் அடியவர்கள் பாதயாத்திரையாக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் உகந்தை மலை முருகன் ஆலயத்தை சென்றடைகின்றனர். இதனால், சிரமதானப் பணிகள் பல பக்தர்களுக்கு பயனளித்துள்ளது.

உகந்தை முருகனின் கொடியேற்றம் எதிர்வரும் (29)வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதுடன், ஆகஸ்ட் (11) தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. கடந்த (22) திறக்கப்பட்ட பாத யாத்திரைக்கான காட்டுவழிப்பாதை எதிர்வரும் ஆகஸ்ட் (05) மூடப்படுகின்றது.

## அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்றவருக்கு நீதவான் அபராதம்

பாலமுனை தினகரன் நிருபர்

திருக்கோவில் பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட காயத்திரி பகுதியில் அனுமதிபத்திரமின்றி சட்ட விரோத பியர் விற்பனையில் ஈடுபட்டவருக்கு 15000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு ள்ளது.

35 பியர் போத்தல்களை அனுமதிப்பத்திரமின்றி விற்பனை செய்த இவரை, திருக்கோவில் பொலிஸார் கைது செய்து அக்கரைப்பற்று மாவட்ட /நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜீத் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை(22) ஆஜர் செய்தனர். இதன்போது, மேற்படி குற்றத்திற்காக இவருக்கு 15000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிபத்திரமின்றி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழகத்தின் இரண்டாம் கட்ட உதவிகள் சாய்ந்தமருது மக்களுக்கு பகிர்ந்தளிப்பு

கல்முனை விஷேட நிருபர்

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்த இரண்டாம் கட்ட உதவிகள் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 17 கிராம சேவகர் பிரிவுகளில் நேற்று (25) திங்கட்கிழமை பகிர்ந்தளிக்கப்பட்டன.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், 815 கிலோ அரிசிப்பொதிகளும் 253 கிலோ பால்மா பைக்கற்றுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட இலங்கையருக்கு உதவும் வேலைத்திட்டத்தின் கீழ், இரண்டாம் கட்டமாக இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவை, சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள 17 கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கலாசார மண்டபத்தில் வைத்து இப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## உரிய வேளையில் பசளை கிடைத்ததால் சிறுபோக வேளாண்மை செய்கை வெற்றி

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டசிறுபோகவேளாண்மைச் செய்கை,இம்முறை சிறந்த பயனைத் தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விதைத்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில்,இது வெற்றியடைந்துள்ளதாகவும், இம்முறை களைகளின் தாக்கம் மிகக் குறைவாகவுள்ளதாகவும் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இம்முறை உரிய காலத்திற்கு இரசாயன உரமான யூரியா கிடைத்ததால் நெற்செய்கை வெற்றியளித்துள்ளது.கடந்த பெரும்போகத்தை விடவும் இம்முறை அதிக விளைச்சல் கிடைக்குமென எதிர் பார்ப்பதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

யூரியா உரத்தை விரைவாக பெற்றுத்தந்த ஜனாதிபதி, பிரதமர்,விவசாய அமைச்சர், கிழக்கு மாகாண மற்றும் திருகோணமலை மாவட்ட உயர் அதிகாரிகள் மற்றும் தோப்பூர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் தோப்பூர் விவசாயிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.



கல்முனைத்தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஏ.ஆர்.மன்சூரின் ஐந்தாதவது வருட ஞாகார்த்த நிகழ்வை முன்னிட்டு விஷேட துஆப் பிரார்த்தனை நடாத்தப்பட்டது.கல்முனை முகைதீன் ஜும்மாப் பள்ளிவாசலில் இடம்பெற்ற இந்த துஆப் பிரஆர்த்தனையில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம். (கல்முனை குறூப் நிருபர்)

## தம்பலகாமம் வைத்தியசாலை தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணாமலை தம்பலகமம் பிரதேச வைத்தியசாலையில் கடமைபுரியும் தாதியர்கள் நேற்றுக் காலை (25) முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் சிகிச்சை பெறுவதற்கு வந்த நோயாளிகள் பலரும் சிரமத்துக்கு உள்ளானதுடன், வெளியூரிலிருந்து வந்தவர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர். கடந்த காலங்களில் வழங்கப்பட்டு வந்த ஒய்வு மற்றும் விடுமுறை நாட்களில் பணிபுரியும் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமையைக் கண்டித்தே,இவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர். இதில், தம்பலகாம பிரதேச வைத்திய சாலை தாதியர்களும் ஈடுபட்டனர். கிழக்கு மாகாண சுகாதார சேவைக் குட்பட்ட தாதியர்களும், இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் சமையல் எரிவாயு அமைதியான முறையில் விநியோகம்



மட்டக்களப்பு குறூப் நிருபர்

மண்முனை வடக்கு, காத்தான்குடி பிரதேச செயலக பிரிவுகளில் நேற்று (25) எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க. கருணாகரனின், ஆலோசனைக்கு அமைவாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ. வாசுதேவன் மற்றும் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதய ஸ்ரீதரன் ஆகியோரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இவை, விநியோகிக்கப்பட்டன.

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவினுள் ஆயிரம் சிலின்டர்கள் வழங்கப்பட்டதுடன், காத்தான்குடி பிரதேச செயலக பிரிவினுள் நான்கு பகுதிகளில் தலா 300 சிலின்டர்கள் வீதம் மொத்தமாக 1200 சிலின்டர்கள் குடும்ப அட்டையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு சுமுகமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யானைக்கு வைத்த மின்சார வேலியில் சிக்கி முதியவர் பலி

வெல்லாவெளி தினகரன் நிருபர்

யானைக்கு வைத்த மின்சார வேலியில் சிக்குண்டு முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) பாவக்கொடிச்சேனையில் இடம் பெற்றதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதலைக்குடா கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச்சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான (71) வயதுடைய சின்னத்தம்பி என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர், இப்பிரதேசத்தில் நண்பர் ஒருவரின் தோட்ட வளாகம், மாடு, ஆடுகளை பராமரித்துக் கொண்டு வருகிறார். தோட்டத்தை பாதுகாக்கும் பொருட்டு யானைகளுக்கு வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியிலே, இவர்,சிக்குண்டு உயிரிழந்தார். சம்பவத்தை கண்ட கிராம வாசி ஒருவர், வவுணதீவு பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தகவலை தெரிவித்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் பீற்றர் போலின் உத்தரவிற்கமைய, சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தை பார்வையிட்டதுடன் பிரேத பிரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தீவிரவாதம்,வன்முறைகளிலிருந்து இளைஞர்களை பாதுகாக்க செயலமர்வு

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

தீவிரவாதம் மற்றும் வன்முறைகளை தடுப்பதற்காக இளைஞர், யுவதிகளை அறிவூட்டும் முழுநாள் செயலமர்வு கடந்த சனிக்கிழமை (23) அக்கரைப்பற்று மாநகர சபை ஹல்லாஜ் மண்டபத்தில், மாவட்ட சர்வமதக் குழுவின் தலைவர் ஐ.எல், ஹாசிம் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் (என்,பி,சி) அனுசரணையுடன், அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகத்தினரால் இச்செயலமர்வு ஒழுங்குசெய்யப்பட்டது. இதில் அம்பாரை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந் தும் இளைஞர் சம்மேளனம், சகவாழ்வுச் சங்கம், சாரணர் அமைப்பு,கிழக்குமாகாண இளைஞர் அமைப்பு என்பவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 60 இளைஞர், யுவதிகள் பங்கேற்றனர். இதில்,பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் மற்றும் ஏ,டி,எஸ் அமைப்பின் பிரதிநிதியுமான எஸ்.எல்.எம்.ஹனீபா கலந்து கொண்டார். இங்கு உரையாற்றிய அவர்,

நாட்டின் வளங்களைப் பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட பாராபட்சத்தாலே, நாடு இன்று இந்நிலைக்குச் செல்லக்காரணம்.

இவ்வாறான புறக்கணிப்புக்களே தீவிரவாதம், வன்முறைகளைத் தோற்றுவித்தன. இன்று அதிக வன்முறைகள் நடைபெறும் இடமாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாறி வருகின்றன. இளைஞர்கள் சாதி,மத, இன வேறுபாடுகளை மறந்து அனைவரையும் இலங்கையர்களாக மதித்து வாழ வேண்டும் என்றார்.

அக்கரைப்பற்று தூய நல்லாரோக்கிய அன்னை ஆலய பங்குத் தந்தை வண.பிதா ஜெரிங்க்டன் வின்சென்ட், இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்.

தேசிய ஒருங்கிணைப்பு உத்தியோகஸ்தர் பிரான்சிஸ் பிரதீஷ்கரன், இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் வளவாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

மகாவிலச்சிய பகுதியில் 600 ஏக்கரில் பூசணிக்காய் அறுவடை

# எரிபொருளின்றி விநியோகம் பாதிப்பு; விவசாயிகள் கவலை தெரிவிப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

இம்முறை சிறுபோகத்தின் போது அறுவடை செய்யப்பட்டுள்ள பூசணிக்காயை எரிபொருள் இல்லாத காரணத்தால் விநியோகிக்க முடியாதுள்ளதாக மகாவிலச்சிய பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மகாவிலச்சிய பகுதியில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுவரும் யாய 07 மன்னார் சந்தி, யாய 03 தென் கரை ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் இம்முறை 600 ஏக்கரில் பூசணிக்காய் செய்கை பண்ணப்பட்ட போதும் அந்த அறுவடைகளை



சந்தைக்கு கொண்டு செல்வதற்கு தேவையான எரிபொருள் இல்லாததால் அவர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்தனர்.

அது தொடர்பில் தென் கரை பேமடுவ பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்: அதிக விலையின் கீழ் பசளைகளை பெற்று பூசணிக்காய் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது தம்புத்தேகம, தம்புள்ள ஆகிய பொருளாதார மத்திய நிலையங்களில் சிறந்த கிராய்க்கி உள்ளன. "ராஜா'' வகையிலான பூசணிக்காய் ஒரு கிலோ 170 ரூபாவிற்கும் ஏனைய வகையிலான பூசணிக்காய் 150, 160 ரூபாவிற்கும் விற்பனை செய்ய முடியும். ஆனாலும் அவைகளை சந்தைக்கு கொண்டு செல்வதற்கு வாகனங்களுக்கு எரிபொருளில்லை. சில வியாபாரிகள் பூசணிக்காயை கொள்வனவு செய்வதற்கு கிராமங்களினுள் வருகை தருவதுடன் அவர்கள் குறைந்த விலைக்கே கோருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். அதனால் அறுவடைகளை சாதாரண விலைக்கு விற்பனை செய்வதற்கு சந்தைக்கு கொண்டு செல்வதற்கு தேவையான எரிபொருளை பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட வேண்டும் என கோரிக்கை விடுவதாக அவர் தெரிவித்தார்.




# நாட்டில் டெங்கு நோய் பரவும் வீதம் சடுதியாக அதிகரிப்பு

### 3 வாரங்களில் 9000 டெங்கு நோயாளர்கள்

நாட்டில் டெங்கு நோய் பரவும் வீதம் சடுதியாக அதிகரித்து வருகிறது. கடந்த 3 வாரங்களுக்குள் சுமார் 9000 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலைமை அதிதீவிர நிலையை அடைவதற்கு முன்னர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 3 வாரங்களில் சுமார் 9000 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த நிலைமையை உடனடியாக கட்டுப்படுத்தி, டெங்கு நோய் பாரதூர நோய் நிலைமையாக பரவுவதைத் தடுக்க வேண்டும்.




இதற்காக டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றை தூய்மையாக வைத்திருப்பதோடு, வீடு மற்றும் தொழில் புரியும் இடங்கள் அமைந்துள்ள சுற்றுப்புறச் சூழலையும் தூய்மையாக வைத்திருப்பது அத்தியாவசியமானதாகும்.

நேற்று (25) திங்கட்கிழமை தேசிய டெங்கு ஒழிப்பு தினம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் ஒரு மணித்தியாலம் ஒதுக்கப்பட்டு டெங்கு ஒழிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதே போன்று பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் உள்ளிட்டவற்றிலும் இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில், அதாவது சுமார் 7 மாதங்களில் 44 000 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் டெங்கு நோய் பரவும் வீதம் அதிகரித்து வருவதால், டெங்கு நோய் அறிகுறிகள் காணப்பட்டால் அவற்றை உதாசீனப்படுத்தாது, உடனடியாக வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெறுமாறு வலியுறுத்துகின்றோம் என்றார்.

## கால்நடைகளால் பொதுமக்களுக்கு அசௌகரியம்

திறப்பனை தினகரன் நிருபர்

திறப்பனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட நாச்சியாதீவின் வீதிகளில் அலைந்து திரியும் கால் நடைகளால் பொது மக்களுக்கும் தோட்டச் சொந்தக்காரர்களுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் வீதிகளில் சுற்றித்திரியும் கால் நடைகளுக்குரிய சொந்தக்காரர்கள் அவற்றை சரிவர பராமரிக்காமையே இதற்கு காரணம் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை வேளாண்மைச் செய்கை பண்ணப்படாத வயல் நிலங்கள் அதிகம் இருந்தும் மேய்ச்சலுக்காக அதிகமான கால் நடைகள் இப் பகுதிகளில் விடப்பட்டுள்ளதோடு, மேலும் சில கால்நடைகளே உலா வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் கைதிகள் விடுதலை

## புதிய ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ள விக்கி

### நேரில் சந்தித்து கோரவுள்ளாராம்



நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான ஆவணத்தை, விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சிறையில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து, அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் சி.வி விக்னேஸ்வரன் தமது ஆதரவினை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கியிருந்தார்.

இதனடிப்படையில், ஜனாதிபதியை விரைவில் சந்தித்து, தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கோரவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# நாட்டை விட்டு வெளியேறும் எண்ணம் இல்லை – கப்ரால்



தமக்கு நாட்டை விட்டு வெளியேறும் எண்ணம் இல்லை என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும் தன்மீது நீதிமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுக்களையும் நிராகரிப்பதாகவும் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாடு செல்வதற்கான பயணத்தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒக்டோபர் 26ஆம் திகதி வரை குறித்த தடையை நீடித்து கொழும்பு பிரதான நீதவான் ஹர்ஷன இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.


தென் மாகாண முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோனால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அல்லது நிதிச் சபையின் அனுமதியின்றி அமெரிக்க நிறுவனத்திற்கு, 6.5 மில்லியன் டொலர்களை செலுத்தி அவர் குற்றம் புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


அத்துடன், 2022 ஜனவரி 18ஆம் திகதி செலுத்த வேண்டிய முறிப் பத்திரங்கள் மூலம் அரசிற்கு 500 மில்லியன் டொலர் நஷ்டத்தை ஏற்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆளுநராக கடமையாற்றிய காலத்தில், உற்றார் உறவினர்களை பதவிகளுக்கு நியமித்த தன் மூலமும், திறைசேரி மற்றும் பிணை முறிகள் தொடர்பான இரகசிய தகவல்களை வெளியிட்டதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## சிறு விளம்பரம்






கார்கள் விற்பனைக்கு

WP CAS-3785 Tata nano, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714 542958. 042579

## 2022 வருடாந்த பொதுக்கூட்டம்

எதிர்வரும் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு, மட்டக்களப்பு Y.M.C.A மண்டபத்தில் கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல் : தலைவர், செயலாளர்

## கொழும்பு மாநகர சபை

## விலைமனுவிற்கான அறிவித்தல்

தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகளை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

| தொடர் இலக்கம் | கேள்வி இல. | விளக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் - ரூபாவில் | விலைமனுப் பிணையின் பெறுமதி - ரூபாவில் | கேள்விதாரர்கள்/ விலைமனுதாரரின் தகுதித்தன்மை | மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|---|---|---|
| 01. | ME/CP/BN/248/2021 | பொறளை எரிபொருள் நிலையத்தில் தரைகீழ் டீசல் தாங்கியை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் | 5,600.00 | 320,000 ரூபா - நிபந்தனையற்ற விண்ணப்ப உத்தரவாதம் | தரைகீழ் கொன்கிறீட் எரிபொருள் தாங்கி தொடர்பான குறிப்பிடத்தக்க அனுபவமுள்ள சித்திகரமான விலைமனுதாரர் மற்றும் CIDA இன் சி-6 அல்லது மேற்பட்ட தரத்தையுடைய கட்டிட ஒப்பந்தக்காரர்கள் | செயற்றிட்டப் பணிப்பாளர் 0112-692403 |

கேள்வி ஆவணம் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) ஆகியவற்றை இரு முறைமைகளினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**முறைமை - 01 – கொழும்பு மாநகர சபையின் www.colombo.mc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தல்.**

I. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை பின்வரும் முறைமையூடாக செலுத்தலாம்.

அ) 167-1-001-6-3169425 என்ற கணக்கிலக்கத்தை கொண்டுள்ள மக்கள் வங்கி நகரமண்டப கிளையில் வரவு வைக்குமாறு எந்த மக்கள் வங்கி கிளையிலிருந்தும் அனுப்புதல்.

ஆ) வாரநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப.3 மணி வரையும் பின்வரும் கொழும்பு நகர எல்லைக்குளுள்ள மாநகர இடப்பரப்புக்களிலுள்ள பணக்கொடுப்பனவு கருமபீடங்கள்.

- **வட்டார அலுவலகம் 4**
  **இல. 147,ஹைலெவல் வீதி**
  **கிருளப்பொன**
  **கொழும்பு-06.**

  **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
  **மாளிகாகந்த,**
  **கொழும்பு-10.**

II. மூலப்பிரதி பற்றுச்சீட்டு/ வரவுத் துண்டு ஆகியவற்றை கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைப்பது கட்டாயமானதாகும்.

III. இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்றுக் கொண்ட விலைமனுதாரர்கள் dirproj@colombo.me.gov.lk என்ற மின்னஞ்சல் மூலம் பின்வரும் விபரங்களை மின்னஞ்சல் வழியாக அறிவிக்கப்படல் வேண்டும்.

1. கம்பனியின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்பு தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி.

**முறைமை 02 –நகரமண்டப இடப்பரப்பிலிருந்து கையேற்றல்**

அ) 2022.08.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும், வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை ஒவ்வொரு விலைமனுவிற்கும் நகர மண்டப இடப்பரப்பிலுள்ள சிறாப்பர்களின் கருமபீடங்களில் செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்களத்தின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ) விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022.08.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்குப் பின்னர் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படமாட்டாது/ வழங்கப்படமாட்டாது.

இ) விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 210 நாட்களுக்கு நிபந்தனையற்ற உடனடியாக பெறக்கூடிய விலைமனு உத்தரவாதம்/விலைமனுப்பிணையானது 2023.03.07 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதம்/விலைமனுப்பிணை ஆகியன 2023.02.05 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். பிணைக்கான வைப்பு ரொக்கப் பணத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி ஆகியன மூலப்பிரதியானது உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்டு நகல்பிரதியுடன் 2022.08.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-07,மாநகரமண்டபம், மாநகர சபை செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

உ) கேள்வி/ விலைமனுவானது 2022.08.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படுவதுடன் மூடும் நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். இந்தநாள் பொதுவிடுமுறையாக பிரகடனப்படுத்தப்படின், விலைமனுக்கள் அடுத்த வேலை நாளன்று மு.ப. 10 மணிக்கு திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் திறத்தலின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் கேள்விகள் /பெறுமதி 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமாக இருப்பின், 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் சட்டம் 03 ஆம் இலக்கத்திற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்த பின்னர் பிசிஏ-3 படிவமானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

CSIAP

THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**கமத்தொழில் அமைச்சு**

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**

**கிழக்கு மாகாணத்தில் வீட்டுத் தோட்டச் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மரக்கறி விதைகள் மற்றும் சோள விதைகள், வேர்கள் மற்றும் கிழங்குச் செய்கைக்கான நடுகைப் பொருட்கள், மஞ்சள் மற்றும் இஞ்சி மற்றும் பழமரக் கன்றுகள் மற்றும் 25 கி.கிராம் சேதனப் பசளைகளுக்கான பெறுகை**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனைப் பெற்றுள்ளது என்பதுடன் இக்கடனின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒப்பந்தகளின் கீழ் தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

   பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் - கிழக்கு மாகாணம் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

   உலக வங்கியினால் நிதியுதவியளிக்கப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் வீட்டுத் தோட்டச் நிகழ்ச்சித்திட்டத்தின் (CSIAP) கீழ் கிழக்கு மாகாணத்தில் வீட்டுத் தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 16,413 எண்ணிக்கையான (14 வகையான மரக்கறி விதைகள் மற்றும் சோள விதைகள், வேர்கள் மற்றும் கிழங்குச் செய்கைக்கான நடுகைப் பொருட்கள், மஞ்சள் மற்றும் இஞ்சி மற்றும் பழமரக் கன்றுகள் மற்றும் 25 கி.கிராம் சேதனப் பசளைகளுக்கான பெறுகை.

   ஒப்பந்த இலக்கம் **LK-MOA-300049-GO-RFB/DPDO(EP)/** விதைப் பொதிகள் **(03)/2022/031**

| லொட் இல. | வேலையின் விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் (இல. ரூபா) | இல. ரூபாயில் விலைமனு பிணை முறி உத்தரவாதம் மற்றும் செல்லுபடிக் காலம் | இறுதித் திட்டத் தள இலக்கு |
|---|---|---|---|---|
| 1 | 5 கிராம் மிளகாய் விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | 9000.00 இல. ரூபா | 7,500.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (கிழக்கு மாகாணம்), லவ் லேன், உப்புவெளி, திருகோணமலை |
| 2 | 1 கிராம் தக்காளி விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 5,250.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 3 | 1 கிராம் கத்தரி விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 2,250.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 4 | 5 கிராம் ஒக்ரா (Okra) விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 5,250.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 5 | 5 கிராம் பயற்றம் விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 5,250.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 6 | 1 கிராம் குடை மிளகாய் (OP) விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 3,750.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 7 | 5 கிராம் பாகற்காய் விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 7,500.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 8 | 5 கிராம் புடலங்காய் விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 6,750.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 9 | 5 கிராம் சிறகவறை விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 5,250.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 10 | 1 கிராம் முள்ளங்கி விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 2,250.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 11 | 5 கிராம் வெள்ளரி (Cucumber) விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 5,250.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 12 | 5 கிராம் சுண்டைக்காய் (Luffa) விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 7,500.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 13 | 0.5 கிராம் பசளி விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 3,000.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 14 | 0.5 கிராம் Amaranthus விதைப் பெக்கற்றுகள் வழங்குதல் | | 3,750.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 15 | 500 கிராம் சோள பெக்கற்றுகள் வழங்குதல் | | 30,000.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 16 | மரவள்ளி வெட்டுத் துண்டுகள் (20 குச்சிகள்/பொதி) வழங்குதல் | | 2,700.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | திருகோணமலை கமநல சேவை நிலையங்கள் (குச்சவெளி, புல்மோட்டை, கோமரங்கடவளை, பதவிசிறிபுர, மொரவெவ) |
| 17 | வற்றாளை வெட்டுத் துண்டுகள் (50 கொடி/பொதி) வழங்குதல் | | 1,350.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 18 | மஞ்சள் முளைத்த வேர்த்தண்டுக் கிழங்கு (250 கிராம் / 10 துண்டுகள்) வழங்குதல் | | 472.50 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 19 | இஞ்சி முளைத்த வேர்த்தண்டுக் கிழங்கு (250 கிராம் / 10 துண்டுகள்) வழங்குதல் | | 675.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 20 | பப்பாசிக் கன்றுகள் வழங்குதல் | | 4,050.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 21 | எலுமிச்சம் கன்றுகள் வழங்குதல் | | 8,100.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 22 | கொடித்தோடைக் கன்றுகள் வழங்குதல் | | 3,240.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 23 | சேதனப் பசளை வழங்குதல் (25 கி.கிராம் பைகள்) | | 13,500.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 24 | மரவள்ளி வெட்டுத் துண்டுகள் (20 குச்சிகள்/பொதி) வழங்குதல் | | 1,800.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | மட்டக்களப்பு கமநல சேவை நிலையங்கள் (வந்தாறுமூலை, கரடியனாறு, ஆயித்தியமலை) |
| 25 | வற்றாளை வெட்டுத் துண்டுகள் (50 கொடி/பொதி) வழங்குதல் | | 900.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 26 | மஞ்சள் முளைத்த வேர்த்தண்டுக் கிழங்கு (250 கிராம் / 10 துண்டுகள்) வழங்குதல் | | 315.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 27 | இஞ்சி முளைத்த வேர்த்தண்டுக் கிழங்கு (250 கிராம் / 10 துண்டுகள்) வழங்குதல் | | 450.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 28 | பப்பாசிக் கன்றுகள் வழங்குதல் | | 2,700.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 29 | எலுமிச்சம் கன்றுகள் வழங்குதல் | | 5,400.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 30 | கொடித்தோடைக் கன்றுகள் வழங்குதல் | | 2,160.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 31 | சேதனப் பசளை வழங்குதல் (25 கி.கிராம் பைகள்) | | 9,000.00- 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 32 | மரவள்ளி வெட்டுத் துண்டுகள் (20 குச்சிகள்/பொதி) வழங்குதல் | | 3,000.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | அம்பாறை கமநல சேவை நிலையங்கள் (பானம, லஹுகல, பொத்துவில், கோமாரி, தம்பிலுவில்) |
| 33 | வற்றாளை வெட்டுத் துண்டுகள் (50 கொடி/பொதி) வழங்குதல் | | 1,500.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 34 | மஞ்சள் முளைத்த வேர்த்தண்டுக் கிழங்கு (250 கிராம் / 10 துண்டுகள்) வழங்குதல் | | 525.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 35 | இஞ்சி முளைத்த வேர்த்தண்டுக் கிழங்கு (250 கிராம் / 10 துண்டுகள்) வழங்குதல் | | 750.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 36 | பப்பாசிக் கன்றுகள் வழங்குதல் | | 4,500.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 37 | எலுமிச்சம் கன்றுகள் வழங்குதல் | | 9,000.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 38 | கொடித்தோடைக் கன்றுகள் வழங்குதல் | | 3,600.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |
| 39 | சேதனப் பசளை வழங்குதல் (25 கி.கிராம் பைகள்) | | 15,000.00 - 2022 ஜனவரி 10ஆம் திகதி | |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
3 விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்களின் மூலப் பிரமாண விபரக்குறிப்புகள், நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை திருகோணமலை, உப்புவெளி, லவ் லேன், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (கிழக்கு மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2054999, தொலைநகல்: 026-2054999 மின்னஞ்சல்: **dpdepcsiap@gmail.com)** மற்றும் அதே இடத்தில் 2022 ஜூலை 26ஆம் திகதி முதல் 2022 ஆகஸ்ட் 16ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2022 ஜூலை 26ஆம் திகதி முதல் 2022 ஆகஸ்ட் 16ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
6. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர்கள் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022 ஆகஸ்ட் 09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் கலந்துகொள்வதற்கு முன் விலைக்கோரல் ஆவணத்துடன் குறிப்பாக விபரக்குறிப்புகள், ITB மற்றும் ஒப்பந்தத் தரவுகளை நன்கு அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகை மற்றும் செல்லுபடியாகும் தினத்திற்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் பொருட்களின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஆகஸ்ட் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (கிழக்கு மாகாணம்), லவ் லேன், உப்புவெளி, திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
11. விலைமனுக்கள் 2022 ஆகஸ்ட் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (கிழக்கு மாகாணம்),**
**லவ் லேன், உப்புவெளி, திருகோணமலை.**
**2022-07-26ஆம் திகதி.**

# உள்ளூராட்சித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

**2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்**

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் ஆகிய என்னால் 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள வல்வெட்டித்துறை நகர சபையின் வெற்றிடமாகவுள்ள தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2022.08.04ஆம் திகதி காலை 09.30 மணிக்கு வல்வெட்டித்துறை நகர சபையின் மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு மாகாணம்.**

**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்,**
**முதியோர் இல்ல வளாகம்,**
**A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.**
21.07.2022

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை – களுத்துறை

## விலைமனு அழைத்தல்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிராந்தியப் பெறுகைக்குழுத் தலைவரினால் கீழ்க்காணப்படும் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்காக பின்வரும் வகைப்படுத்தலின் கீழ் தனித்தனித் தகைமைகளுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு குறியீட்டு இலக்கம் | விலைமனுப் பெயர் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| BME/MEQ/PSSP/ DEN/ X-RAY/ 2022 | Purchasing of Digital Dental X- Ray Machine | 03 | 2,000.00 | 60,000.00 |

1. விலைமனுக்கோரல், தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.
2. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   I. மேற்படி உபகரணங்களை விற்பனை செய்வதற்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
   II. உற்பத்தியாளர்கள் அன்றேல், விலைமனுதாரர்கள் அவ் உருப்படிகளை விற்பனை செய்வதற்காக, உற்பத்தியாளர்களிடமிருந்து எழுத்துருவ அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
   III. குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் உரித்தான வியாபாரத்துறைகளில் ஈடுபட்ட அனுபவம்
   IV. உபகரணங்களை விற்பனை செய்வதற்கான NMRA சான்றிதழ்
3. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை, த.பெ. 29, கச்சேரிக் கட்டிடத் தொகுதி, 04ஆம் மாடி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் நிருவாக அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், மேற்படி மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை களுத்துறைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் செலுத்துவதன் மூலம், விலைமனு ஆவணங்களை 2022.07.26 முதல் 2022.08.09 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 03.00 வரை கொள்வனவு செய்து கொள்ளலாம்.
4. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - களுத்துறை என்ற பெயரில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பெற்றுள்ள, இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வணிக வங்கி யான்றிலிருந்து மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுப் பிணையமொன்று, பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக, மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு, தனித்தனி உறைகளில் சேர்த்து முத்திரையிட்டு, அவற்றை முத்திரையிடப்பட்ட ஒருறையில் சேர்த்து, அதன் இடது பக்க மேல் மூலையில் Purchasing of Dental X- Ray Machine இற்காக BME/MEQ/PSSP/DEN/X-Ray/2022 எனக்குறிப்பிட்டு 2022.08.10 அன்று மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.
5. தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நீராகரிக்கப்படும் என்பதுடன், விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை, விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. மேலதிக விபரங்களிற்காக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பார் பணிமனையின் 034-2222610, 034-2222367, 038-2294700 ஐ அழைக்கவும்.

**தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**களுத்துறை.**

# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**Accelerating Higher Education Expansion and Development Operation (AHEAD)**

## INVITATION FOR BIDS (IFB)

**Supply, Installation and Maintenance of Air Conditioners at FAC, SEUSL, Oluvil under ELTA-ELSE Project**

**(SEU/AHEAD/RA2/ELTAELSE/FAC/GOODS/NCB/2022/22)**

1. The **Chairman, Project Procurement Committee** of the South Eastern University of Sri Lanka invites sealed bids from eligible and qualified bidders for procurement of the following type of air conditioners.

| Item No. | Description | Quantity | Bid Security Amount |
|---|---|---|---|
| 01 | Air Conditioner 12,000 BTU | 05 | Rs. 200,000/- |
| 02 | Air Conditioner 24,000 BTU | 07 | |
| 03 | Air Conditioner 36,000 BTU | 08 | |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.
3. Interested eligible bidders may obtain further information from Deputy Director / Procurement, OTS, AHEAD Operation, South Eastern University of Sri Lanka, University Park, Oluvil # 32360 (Telephone: 067 22 55177 / 067 22 55189) from 9.00 a.m. to 2.30 pm on weekdays.
4. A Bid Security obtained from a Central Bank approved commercial bank to the value as stated above to be valid until 15th December 2022 should be submitted along with the bid.
5. A complete set of bidding documents in English Language may be purchased by interested bidders on submission of a written application and upon payment of a non-refundable fee of LKR 5,000/= from 9.00 am to 3.00 pm up to **12.08.2022**. The mode of payment shall be either by cash payable at the Shroff of the University or bank draft in favour of "Bursar, South Eastern University of Sri Lanka".

   Bidding documents can also be requested by email till 3.00 pm on 12.08.2022 by emailing the request letter to **dradmin@seu.ac.lk** with the scanned copy of the receipt for payment of the non-refundable fee to the University Collection Account Number: **228 1001 9000 1704** at People's Bank, Addalaichenai, from any branch of People's Bank.
6. Sealed Bids should be marked, **"Supply, Installation and Maintenance of Air Conditioners at FAC, SEUSL, Oluvil under ELTA-ELSE Project (SEU/AHEAD/RA2/ELTAELSE/FAC/GOODS/NCB/2022/22)** and placed in the tender box kept in the OTS Office, AHEAD Operation, South Eastern University of Sri Lanka, Oluvil or sent under registered cover to be received before **2.00 p.m. on 16.08.2022** at the following address. Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at 2.15 p.m. **on the same day** at OTS Office, AHEAD Operation, South Eastern University of Sri Lanka, Oluvil. Late bids will be rejected.

**Chairman**
**Project Procurement Committee**
**South Eastern University of Sri Lanka**
26.07.2022

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

மாத்தறை மாவட்டத்திலுள்ள

# தரிசு நிலங்களை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்த நடவடிக்கை

## விவசாய உத்தியோகத்தர்களுக்கு மாவட்ட செயலாளர் பணிப்பு

**மாத்தறை தினகரன் நிருபர்**

மாத்தறை மாவட்டத்தில் இது வரை பயிர் செய்யப்படாது காணப் படும் தரிசு நிலங்களை இனங்கண்டு அக்காணிகளை பயிர்ச் செய்கையில் ஆர்வமுள்ள இளைஞர் சமுதாயத் துக்கு பகிர்ந்து கொடுக்க விவசாய உத்தியோகத்தர்களின் மூலமாக நட வடிக்கை எடுக்குமாறு மாத்தறை மாவட்ட செயலாளர் வை. விக்கிரம சிறி தெரிவித்தார்.



மாத்தறை மாவட்ட செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் மாவட்ட பிரதேச செயலாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே (22) மாவட்டச் செயலாளர் மேற்கண் டவாறு கூறினார். எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படவுள்ள உணவுநெருக் கடிக்கு நாம் முகம் கொடுக்க வேண் டியுள்ளது. இந்த நெருக்கடியை சமா ளிக்க எமது மாவட்டத்தில் உள்ள சகல தரிசுநிலங்களிலும் உணவு உற்பத்தியைப் பெருக்க நாம் நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

இம்மாவட்டத்திலுள்ள 16 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம சேவைப் பிரதேசங்களில் காணப்ப டும் விவசாய செய்கைக்கு பொருத் தமான காணிகளை இனங்கண்டு அக்காணிகள் பற்றிய விவரங்களை தமக்கு சமர்ப்பிக்குமாறும் மாவட் டச் செயலாளர் பிரதேசசெயலாளர்க ளிடம் கேட்டுக் கொண்டார்.

# நந்தவனம் சந்திரசேகரனின் நூலுக்குப் பரிசும் விருதும்



சென்னை இச்சா மையத்தில் (24) நடைபெற்ற கவிஓவியா இலக்கிய மன்றம் மற்றும் கவிஓவியா பதிப்பகம் நடத்திய சிறந்த நூல்களுக்கான பரிசுப்போட்டியில் பத்திரிகை யாளரும் எழுத்தாளருமான நந்தவனம் சந்திரசேகரன் எழுதிய "வாங்க மனம்விட்டுப் பேசலாம்" என்ற கட்டுரை நூலுக்கு 2021 ஆண்டில் வெளியான சிறந்த நூலுக்கான விருதும் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது கவிதை உறவு இதழாசிரியர் ஏர்வாடி இராதா கிருஷ்ணன் தலைமையில் எழுத்தாளர் அமுதா பாலகிருஷ்ணன் கவிஞர் கார்முகிலோன் இருவரும் விருது வழங்கிச் சிறப்பித்தனர். பொறியியலாளர் ஜெயந்தி, சேக்கிழார் அப் பாசாமி ஆகியோர் வாழ்த்துறை வழங்கினர். மயிலாடுதுறை இளையபாரதி நிகழ்ச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

# எரிபொருள் வரிசையில் இடையூறு; மூவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

எரிபொருளினை பெற்றுக் கொள் வதற்கு வரிசையில் காத்திருந்த சில ருக்கு இடையூறு விளைவித்த சம்ப வத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் ஜயந்தி சுற்று வட் டத்திற்கு அருகிலுள்ள சிவஞானம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகிலேயே இச்சம்பவம் (23) இரவு இடம்பெற்றுள்ளதாக விசா ரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அநுரா தபுரம் ஹிதோகம பகுதியை வசிப் பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணை களில் இருந்து தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் ஓய்வு பெற்ற பெண் இராணுவ சிப்பாய் ஒருவரும் இரு ஆண்களும் உள்ள டங்குகின்றனர் என்பது மேலும் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



"அகில பாரத இந்து யுவா மோர்ச்சா"வின் தேசிய பொதுச் செயலாளரும் "இந்து எழுச்சி பேரவை"யின் மாநில தலைவருமான சந்தோஷை இலங்கை சமூக சேவகர் வினோத் பாலச்சந்திரன் அண்மையில் சென்னையில் சந்தித்தார். பேரவையின் மாநில பொதுச் செயலாளர் சதீஷும் காணப்படுகிறார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்

# எரிபொருள் அனுமதிப்பத்திர முறை அறிமுகப்படுத்தும் நிகழ்வு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொ ருள் தட்டுப்பாட்டிற்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு பரீட் சாத்தமாக நாடு பூராவும் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரத்தினை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அறிமுகப்படுத்தும் நிகழ்வு மாவட்ட செயலாளர் எச். பீ. சுமனசேகர தலைமையில் (23) பரீட்சிக்கப்பட்டது.

இதன்போது, பதிவு செய்த வாகன உரிமையாளர்களுக்கு வாகன இலக் கத்திற்கு ஏற்ப அனுமதிப்பத்திரம் பரீட்சிக்கப்பட்டு எரிபொருள் விநி யோகிக்கப்பட்டது. ஏரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கும் இந்த அனுமதிப் பத்திரத்தினை கைத்தொலைபேசி ஊடாக பரீட்சிப் பது தொடர்பாக அதிகாரிகளினால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பதிவு செய்யாத வாகன உரிமையா ளர்களுக்கு இளைஞர் சேவைமன்ற இளைஞர்களினூடாக பதிவுசெய்ய வும் இதன் போது நடவடிக்கைஎடுக் கப்பட்டது.

இதன் போது வாகனஉரிமை யார்கள் தெரிவித்ததாவது, இம் முறைப்படி உரிய தினங்கில் வாகன இலக்கங்களுக்கு தொடர்ந்தும் எரி பொருள் கிடைக்குமானால் சிரமம் இன்றி தங்களுக்கு தேவையான எரி பொருளினை பெற்றுக் கொள்ளமுடி யும் எனவும் தெரிவித்தனர்.

# வெலிகம நகர எரிபொருள் நிலையங்களில் வாகன நெரிசல் குறைந்த பாடில்லை

**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம நகரத்திலுள்ள இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களி லும் வாகன வரிசைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். வெலிகம நகரத்தில் இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளபோதும் இதில் தினமும் நீண்ட வரிசையில் வாகனங் கள் நிறுத்தப்பட்டே காணப்படுகின் றன. பல்வேறு முறைகளை அரசாங் கம் அறிமுகம் செய்தும் வரிசைகள் குறைந்தபாடில்லை. இதனால் போக் குவரத்துக்கும் பெரிதும் பாதிப்பு ஏற் பட்டுள்ளது. வீணான வாக்கு வாதங் களும் முரண்பாடுகளும் நிகழ்ந்த வண்ணம் உள்ளதாக எரிபொருள் பெற்றுக்கொள்ள வருகை தருவோர் தெரிவிக்கின்றனர்.

மலைச்சாரல்

# நடைபாதை வியாபாரிகளால் பாதசாரிகளுக்கு ஆபத்து

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி நகரின் முக்கிய வியாபார கேந்திர நிலையமான சேர்ச் வீதி தொடர்ந்தும் நடைபாதை வியாபாரிகளின் ஆக்கிரமிப்புக்குள் ளாகியுள்ளது.

பிரதான பஸ் நிலையத்துக்கு செல்லும் வீதியாகவும் பிரதான பாடசாலைகளின் மாணவர்களின் நடமாட்டமுள்ள வீதியாகவும் காணப்படும் இப்பிரதான வீதியை ஆக்கிரமித்து நடைபாதை வியா பாரிகள் வியாபாரம் நடத்தி வரு கின்றமையால் இவ்வீதி தினமும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது டன் பாதசாரிகள் மீது வாகனங்கள் மோதும் ஆபத்தும் காணப்படுகி றது.

மேலும் பல நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதா கவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலமாக இப்பிரச்சினை இருந்து வருகின்றது. காலத்துக்கு காலம் இப்பிரச்சினைக்கு தற்காலிக தீர்வுகள் பல முன்வைக்கப்பட்ட போதிலும் அவையெதுவும் சாத்தி யப்படவில்லை.

தற்போது மீண்டும் வீதியில் இரு புறங்களிலும் கொட்டில்கள், கூடா ரங்கள் அமைத்தும் வீதியை ஆக்கிர மித்தும் நடைபாதை வியாபாரிகள் வியாபாரத்தை நடாத்தி வருகின் றனர். இதனால் இவ்வீதியில் செல்லும் வாகனங்கள் இவ்வீதியில் பயணிக்கும் பாதசாரிகள் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது.

அத்துடன் வீதியோரமாக நிறுத் தப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் கடை உரிமையாளர்க ளின் வாகனங்களால் இவ்வீதியின் நெருக்கடி நிலைமை இரட்டிப்பாக காணப்படுவதாகவும் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

# இரத்தினக் கல் அகழ்வு குழி இடிந்து விழுந்து ஒருவர் பலி

## கஹவத்தை, எந்தான பகுதியில் சம்பவம்

**காவத்தை தினகரன் விசேட, பலாங்கொடை தினகரன் நிருபர்கள்**

கஹவத்தை எந்தான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பனாபிடிய நாவலகந்த பிர தேசத்தில் இரத்தினக் கல் அகழ்வு குழியொன்று நேற்று முன்தினம் (24) உடைந்து விழுந்து ஒருவர் பலியா னதுடன் மற்றுமொருவர் படுகாயம் அடைந்து வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக எந்தான பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமடைந்த நபர் பனா பிடிய பகுதியை சேர்ந்த 36 வயது ஆர். முத்துக்குமார சிங்க என்ற ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

இயந்திரங்களை பயன்ப டுத்தி பாரிய இரும்பு தகடு களை கொண்டு உருவாக்கிய இரத்தினக்கல் அகழ்வு குழி சுமார் 50 அடி ஆழமானது என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பகல் நேரத்தில் இரண்டு வாகனங் கள் மோதியது போன்ற பாரிய சத்தம் கேட்டதுடன் அப்பிர தேசத்தில் அதிர்வை உணர்ந்த தாகவும் இரத்தினக் கல் குழி உடைந்து விழுந்ததனால் இந்நிலை ஏற்பட்டதாக அப்ப குதியில் வசிப்போர் தெரிவித் தனர்.

இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களை காப்பாற்றுவதற்காக எந்தான பொலிஸாருடன் எந்தான வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் பிரதேச மக்கள் சுமார் 2 மணித்தியாலங்கள் போராடி யதாக தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில் இரத்தி னக் கல் அகழ்வு பணியில் ஈடுபட வேண்டாம் என பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும் அதனை பொருட்படுத்தாமல் அவர்கள் இரத்தினக் கல் அகழ் வில் ஈடுபட்டதாக பொதுமக் கள் சுட்டிக் காட்டினர்.





# இந்திய நிவாரண பொருட்கள் கிடைக்கவில்லை என புகார்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

இந்திய, தமிழக அரசின் மூலம் வழங்கபட்ட நிவாரண பொருட் கள் மஸ்கெலியா நகரை அண்மித் துள்ள 300 க்கும் மேற்பட்ட வரிய குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என புகார் தெரிவிக்கின்றனர்.

இந்த மக்களுக்கு யார் முன் னின்று இந்நிவாரண பொருட் களை பெற்று கொடுப்பார்கள் என கேள்வி குறியாக உள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதி காரிகள் கவனம் செலுத்தி மஸ் கெலியா நகரை அண்மித்துள்ள அனைத்து வறிய மக்களுக்கும் இந்த பொருட்களை பெற்று கொடுக்க முன்வரவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மேலும் பல பகுதிகளில் இந்த நிவாரண பொருள் கிடைக்க வில்லை என மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய

# நுவரெலியா மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகங்கள் அமைக்கப்படுவது அவசியம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய நுவரெலியா மாவட்டத் தில் புதிய பிரதேச செயலகங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டுமென இலங்கை தொழிலா ளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கனகராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக் கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் அதிகரிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகி மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அது இதுவரைக்கும் நடை முறைக்கு வரவில்லை. இதனால் பிர தேசத்தில் வாழ்கின்ற மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்ற னர்.

நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் அதிகரிப் பதற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதம மந்திரி யாக இருந்த காலத்தில் அதிகளவு அக்கறை காட்டி இருந்தார். அவருடைய காலத்திலேயே இதற்கான வர்த்தமானி அறிவித்த லும் வெளியிடப்பட்டிருந் தது. ஆனால் துரதிஷ்டவச மாக அக்காலப்பகுதியில் இது நடைமுறைக்கு வர வில்லை. இது தொடர் பாக முன்னைய ராஜபக்ச அரசாங்கத்திற்கு இலங் கைத் தொழிலாளர் காங் கிரஸ் பலமான அழுத்தங்களை கொடுத்தது. இருந்தபோதும் அவர் கள் இரண்டு உப பிரதேச செய லகங்களுடன் இந்த விடயத்தை முடித்துவிட்டனர். ஆயினும் அதில் நாங்கள் திருப்தி கொள்ளவில்லை. தற்போதும் அவை பேரளவிலான உப பிரதேச செயலக காணப்படு கின்றன தவிர அதில் மக்களுக்கான சேவைகள் வழங்கப்படுவதில்லை.



கடந்த அரசாங்கம் மலையக மக்க ளின் நலன் கருதி இந்த விடயத்தில் இதய சுத்தியோடு நடந்து கொள்ள வில்லை. வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய காலி மாவட்டத்தில் பிரதேச செயலகத்தை அமைத்த முன்னைய அரசாங்கம் நுவரேலியா மாவட்டத்தில் வர்த்த மானி அறிவித்தலை நடைமுறைப்படுத்த முன் வரவில்லை. இது கடந்த அரசாங்கத்தின் இனவாத மேலாதிக்கத்தின் வெளிப் பாடாகும்.தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நுவரெலியா மாவட்ட தமிழ் மக் களின் நடைமுறை பிரச்சனையை கவனத்திற்கொண்டு பிரதேச செய லகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட் டைக் கொண்டிருந்தார். அதனால் இவ் விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலையீடு செய்து நுவ ரெலியா மாவட்டத்திற்கு முழுமை யான பிரதேச செயலகங்களை பெற் றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி, வெலம்பொட பொலிஸ் பிரிவில் கொலை செய்யப்பட்ட நிலையில் பெண் ஒருவரின் சடலம் ஒன்றை பொலிஸார் நேற்று (25) மீட்டுள்ளனர்.

வெலம்பொட, பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பரணபட்டிய என்ற இடத்தில் மேற்படி சட லத்தை பொலிஸார் மீட்டுள்ள னர். வீடொன்றில் தனிமையில் வாழ்ந்து வந்த 68 வயது மதிக்கத் தக்க பெண் ஒருவரே இவ்வாறு சட லமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் சில தினங்களுக் குமுன் கொலை செய்யப்பட்டிருக் கலாம் எனப் பொலீசார் சந்தேகிக் கின்றனர்.

அத்துடன் ஆரம்பக்கட்ட விசா ரணைகளில் இருந்து இது ஒரு கொலை என சந்தேகிப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

# பலாங்கொடை பிரதேசபையில் டெங்கு ஒழிப்பு பணி

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன் னிட்டு பலாங்கொடை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் அதிகாரிகள் நேற்று (25) பிரதேச செயலாளர் வளவில் சுற்றாடலை சுத்திகரிப்பு செய்யும் பணியில் ஈடு பட்டனர்.

பிரதேச செயலக வளவிலுள்ள குப்பை கூளங்களை ஒன்று சேர்த்து அவற்றை அதிகாரிகள் ஓரிடத்தில் சேர்த்து தீ வைத்து அழித்தனர்.

பலாங்கொடை பிரதேச செயல கத்தின் சூழலில் டெங்கு நுளம்பு பரவாமல் தடுக்கும் வேலை திட் டத்தினை பிரதேச செயலாளர் ஹேமந்த பண்டாரவின் ஆலோச னையின் கீழ் அதிகாரிகள் மேற் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை பாகிஸ்தான் 2 ஆவது டெஸ்ட்

# இலங்கையின் சுழல்பந்து வீச்சில் தடுமாறியது பாகிஸ்தான் அணி



இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று ஆட்ட நேர நிறைவில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட் இழப்பிற்கு 191 ஓட்டங்களை பெற்றது.ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுகளை இழந்து 119 ஓட்டங்களை பெற்று பாகிஸ்தான் அணி இக்கட்டான நிலையில் இருந்தது.

ஆனால் தனியாக போராடி ஆட்டமிழக்காமல் ஆடிக் கொண்டிருக்கும் அகா சல்மான் தனது அணியை காப்பாற்ற பெரு முயற்சி செய்தார். சிறப்பாக ஆடிய அவர் தனது கன்னிச் சதத்தை பெற்றார்.

முதலில் துடுப்பெடுத்தாடி இலங்கை அணி முதல் நாள் முடிவில் 6 விக்கெட் இழப்பியற்கு 315 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையில் காணப்பட்டது. ஆனால் இன்று மேலும் 63 ஓட்டங்களை பெற்ற நிலையில் எஞ்சிய 4 விக்கெட்டுகளையும் இலங்கை அணி இழந்தது. இதில் நிரோசன் திக்வெல்ல 51 ஓட்டங்கள் பெற்று அரைச்சதத்தை பதிவு செய்தார். இது தவிர இறுதி வரை போராடிய ரமேஷ் மெண்டிஸ் சிறப்பாக ஆடி 35 ஓட்டங்களை பெற்று அணியை வலுவான நிலைக்கு கொண்டுவந்தார். பந்துவீச்சில் யாஸிர் ஷா மற்றும் நஸீம் ஷா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் மொஹமட் நவாஸ் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.




முதல் இனிங்ஸை ஆரம்பித்த பாக். அணி ஆரம்பத்திலேயே தடுமாறியது. முதல் ஓவரிலேயே ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அப்துல்லா சபீக் ஓட்டமெதும் பெறாமல் அசித் பெர்ணான்டோவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இரண்டாவது விக்கெட் 35 ஓட்டங்களில் வீழ்ந்தது. அணித் தலைவர் பாபர் அசாம் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து இமாமும் ஹக், தனஞ்சய சில்வாவின் சுழலில் 32 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க ரிஸ்வான் முயன்றாலும் அவரும் 24 ஓட்டங்களுடன் ரமேஷ் மெண்டியிஸின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து இணைப்பாட்டமாக 31 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் மத்திய வரிசை வீரர் பவாத் அலாமும் விக்கட்டை இழந்தார். அவரும் ரமேஷ் மெண்டிஸின் சுழலில் சிக்கி விக்கட்டை பறிகொடுத்தார்.

ஆட்டம் நிறைவடைய இருக்கும் நிலையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த அகா சல்மான் ஜயசூரியவின் பந்தில் தனஞ்சயவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

யாஸிர் ஷா ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களுடன் களத்தில் ஆடி வருகிறார். இந்த நிலையில் இலங்கை அணி 187 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது. பந்து வீச்சில் ரமேஷ் மெண்டிஸ் 3 விக்கெட்டுகளையும் ஜயசூரிய 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றியதோடு அசித்த பெர்ணான்டோ மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கட்டை கைப்பற்றினார்கள். (பா)

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ....................

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை : ....................

வாக்களித்தவர் பெயர் : ....................

முகவரி : ....................

மொபைல் இல. : ....................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500

3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 30-07-2022 இல. 18




22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழா

# இலங்கை ஆண்கள் கூடைப்பந்து அணியில் இடம்பிடித்துள்ள ஷிம்ரன், தேவகுமார்

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவுக்காக அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை ஆண்கள் கூடைப்பந்து அணியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஷிம்ரன் யோகானந்தன் மற்றும் கொழும்பைச் சேர்ந்த ஆர்னோல்ட் ப்ரெண்ட் தேவகுமார் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

இந்த இரண்டு இளம் வீரர்களும் அண்மைக்காலமாக இலங்கை கூடைப்பந்து அணியில் இடம்பிடித்து திறமைகளை வெளிப்படுத்திய இவர்கள் இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழா கூடைப்பந்து போட்டியானது 3×3 வடிவில் நடைபெறவுள்ளதால் இலங்கை அணியில் இடம்பிடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2018இல் பங்களாதேஷில் நடைபெற்ற தெற்காசிய கனிஷ்ட கூடைப்பந்து சம்பியன்ஷிப் தொடர் மற்றும் அதே ஆண்டு மலேஷியாவில் நடைபெற்ற 18 வயதின்கீழ் ஆசிய கூடைப்பந்து சம்பியன்ஷிப் தொடரிலும் ஷிம்ரன் இலங்கை அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.

யாழ்ப்பாணம் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையில் கல்வி கற்ற இவர், ஆரம்ப காலத்தில் ஒரு ஜிம்னாஸ்டிக் வீரராகத் திகழ்ந்தார். எனினும், தரம் 7 அல்லது தரம் 8இல் இருக்கும் போது ஜிம்னாஸ்டிக் விளையாட்டை கைவிட்டு அவரது பாடசாலையில் பிரதான விளையாட்டாக விளங்கிய கூடைப்பந்து விளையாட்டில் தன்னுடைய அவதானத்தை செலுத்த ஆரம்பித்தார்.

இலங்கை கூடைப்பந்து அணியின் முன்கள வீரராக அண்மைக்காலங்களில் வெளிப்படுத்திய திறமைகள் காரணமாக ஷிம்ரனுக்கு பொதுநலவாய விளையாட்டு விழாவைப் போன்ற மிகப் பெரிய போட்டித் தொடரொன்றில் முதல் தடவையாக இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.





யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு கூடைப்பந்து வீரர் பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்குபற்றுவது இதுவே முதல் தடவையாகும்.

அண்மைக்காலங்களில் இலங்கை தேசிய கூடைப்பந்து அணியில் முன்கள வீரர்களில் ஒருவராக வலம்வந்து கொண்டிருக்கின்ற மற்றுமொரு தமிழ் வீரர் தான் கொழும்பு – கொட்டாஞ்சனையைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயதான ஆர்னோல்ட். இவர் தனது ஆரம்ப கல்வியை கொட்டாஞ்சனை புனித பெனெடிக் கல்லூரியில் மேற்கொண்டார். பாடசாலைக் காலத்தில் கூடைப்பந்து விளையாட்டில் அதீத திறமைகளை வெளிப்படுத்தி வந்த ஆர்னோல்ட், க.பொ.த சாதாரண தரம் வரை குறித்த கல்லூரியில் கல்வியை முன்னெடுத்தார்.

2018இல் பங்களாதேஷில் நடைபெற்ற தெற்காசிய கனிஷ்ட கூடைப்பந்து சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணிக்காக அவர் விளையாடியிருந்தார்.

# உலக சாதனைகள் முறியடிக்கப்பட்ட உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி




உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் அமெரிக்காவின் ஒரேகான் மாகாணத்தில் உள்ள யூஜின் நகரில் நேற்று நிறைவடைந்தது. இந்த தொடரின் 49 வது வகையான போட்டிகளில் 192 நாடுகளைச் சேர்ந்த 1,972 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். பதக்கப்பட்டியலில் அமெரிக்கா முதலிடம் பெற்றதோடு இதியோப்பியா 2 ஆவது இடத்தையும் ஜமைக்கா 3 ஆவது இடத்தையும் பிடித்தன. குறுந்தூர ஓட்டப் போட்டிகளில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்திய அதே வேளை இம்முறை பல உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டது.

குறிப்பிடத்தக்கது. குறுந்ததூர 400 மீட்டர் தடை ஓட்டத்தில் அமெரிக்காவை சேர்ந்த சிட்னி மெக்லாலின் 50.68 வினாடிகளில் கடந்து, முதல் இடத்தை பிடித்து தங்கம் வென்றார். இதன் மூலம் உலக சாதனையையும் முறியடித்துள்ளார்.தான் நிலைநாட்டிய சாதனையை அவர் மீண்டும் முறியடித்தது குறிப்பிடத்தக்கது.




பெண்களுக்கான 100 மீற்றர் தடை ஓட்டத்தின் இறுதிப் போட்டியில் டோபி அமுசன் இறுதிக் கோட்டைத் தாண்டிய போது, அவர் அதிர்ச்சியடைந்தார்.

அரையிறுதியின் முதல் ஹீட் போட்டியில் இரண்டு மணி நேரத்திற்கும் குறைவாகவே அவர் அமைத்த உலக சாதனை நேரம் கடிகாரத்தில் 12.06 என்று பதியப்பட்டது.காற்றின் வேகம் 2.5 மீ/வி வேகத்தில் இருந்ததால் இறுதிப் போட்டியில் தனது நேரம் உலக சாதனையாக கருதப்படாது என்பதை அவள் உணர்ந்திருந்த போதும் அவர் ஏற்கனவே 12.12 என்ற உலக சாதனையைப் படைத்திருந்தார்.

அமெரிக்க குறுந்தூர ஓட்ட வீரரான லைன்ஸ் 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் 19.31 வினாடிகளில் ஓடி அமெரிக்க சாதனையை முறியடித்துள்ளார். 1996 அட்லாண்டாவில் நடந்த ஒலிம்பிக்கின் இறுதிப் போட்டியில் மைக்கேல் ஜான்சன் 19.32 செக்கன்களில் ஓடி முடித்தார். இது உலக சாதனையாக பதியப்பட்டதோடு இதனை உசைன் போல்ட் பின்னர் முறியடித்திருந்தார். "மைக்கல் ஜோன்சனை போன்ற சிறந்த ஒருவரின் சாதனையை முறியடிக்க முடிந்ததை பெருமையாக கருதுவதாக லைல்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

கோலூன்றிப் பாய்தல் போட்டியில் புதிய உலக சாதனை நிலைநாட்டிய ஸ்வீடனின் அர்மண்ட் 'மோண்டோ' டுப்லாண்டிஸ் தனது பதக்க எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டார். ஒலிம்பிக் சாம்பியனான டுப்லாண்டிஸ், உயர்த்தி, 6.21 மீட்டர் உயரம் பாய்ந்து வெற்றி பெற்றார்.

ஆடவர் 100 மீட்டர் அஞ்சலோட்டப் போட்டியில் அமெரிக்கா மற்றும் ஜமைக்கா அணிகளை ஓரங்கட்டி கனடா அணி 37.48 செக்கன்களில் ஓடி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதே நேரத்தில் அமெரிக்க அணி 37.55 வினாடிகளிலும் பிரிட்டன் 37.83 வினாடிகளிலும் ஓடி இரண்டாம் மூன்றாம் இடங்களை பெற்றன.

ஜமைக்கா 38.06 இல் நான்காவது இடத்தைப் பிடித்தது. கடந்த 1995 மற்றும் 1997ல் பெற்ற வெற்றிகளுக்குப் பிறகு, இந்த போட்டியில் கனடா பெற்ற மூன்றாவது தங்கம் இதுவாகும். முதலிடம் பெற்ற அமெரிக்கா 13 தங்கம் 8 வெள்ளி மற்றும் 11 வெண்கலப் பதக்கங்களை பெற்றதோடு எதியோப்பியா 4 தங்கம் 4 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை பெற்று இரண்டாம் இடத்தை சுவீகரித்தது. ஜமைக்கா 2 தங்கம்,7 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கத்துடன் 3 ஆவது இடத்தையும் கென்யா 10 பதக்கங்களுடன் 4 ஆவது இடத்தையும் சீனா 6 பதக்கங்களும் பெற்றன. இலங்கை சார்பிலும் பல வீரர்கள் போட்டிகளில் பங்கேற்றிருந்தது குறிப்பிடத் தக்கது. (பாஹிம்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 26ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.